பக்கங்கள்:-பன்னிரண்டு
Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி 02 | புதன்கிழமை | (16.06.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 180

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# கண்டனப் பேரணியில் அணிதிரளுமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு

## நண்பகலுக்குப் பின்னர் வழமைநிலை திரும்பும்

(யாழ்ப்பாணம்)

இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதில் அரசாங்கம் காட்டி வரும் அசமந்தப் போக்கைக் கண்டித்து நாளை மாபெரும் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது.

பேரணியில் பொது மக்களை அணி திரட்டும் வகையில் சன சமூக நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களில் பேரணி தொடர்பான விழிப்பூட்டும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

நாளை வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நல்லூர்க் கந்த சுவாமி கோயில் முன்றலிலிருந்து ஆரம்பமாகும் பேரணி கோயில் வீதியூடாக ஆஸ்பத்திரிவீதியைச் சென்றடைந்து அங்கிருந்து யாழ். செயலகத்தைச் சென்றடையும்.

நண்பகலளவில் பேரணி முடிவடைந்ததும் பொது மக்கள் தமது வழமையான செயற்பாடுகளில் ஈடுபடலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நண்பகலுக்குப் பின்னர் போக்குவரத்துக்கள் வழமைக்குத் திருமபும். அரச, தனியார் வர்த்தக நிறுவனங்கள் என்பனவும் நண்பகலுக்குப் பின்னர் வழமையான செயற்பாடுகளில் ஈடுபட முடியும்.

நணபகல் வரை பொது மக்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இறுவெட்டு வெளியீட்டில் தலைவர் பிரபா பங்கேற்பு

(கிளிநொச்சி)

'போரிடும் வல்லமை சேர்ப்போம்' என்னும் இறுவெட்டு வெளியீட்டு விழாவில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற இந் நிகழ்வில் முதன்மைச் சுடரினை தலைவர் பிரபாகரன் ஏற்றிவைத்தார்.

விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினரால் உருவாக்கப்பட்ட இவ் இறுவெட்டை வைத்திய கலாநிதி அஜந்தன் வெளியிட்டு வைக்க தேசியத் தலைவர் அதனைப் பெற்றுக் கொண்டார்.(த)

# சட்டத்திற்கு முரணாக அரசியல் யாப்பை மாற்ற அரசு முயற்சி செய்கிறது

## பேராசிரியர் பீரிஸ் குற்றச்சாட்டு

(நமது நிருபர்)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தனது குறுகிய அரசியல் இலாபநோக்கங்களை மனதில் கொண்டு அரசியல் யாப்பைத் திருத்துவதற்கு முனையாமல் இருபத்தைந்து வருடகால பழைமைவாய்ந்த அரசியல் அமைப்பை முழுமையாகத் திருத்தியமைப்பது சிறந்ததாகும். இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் தற்போதைய அரசியல் செயற்பாடுகள் தெடர்பாகவும் தேர்தல் காலத்தில் அவர்கள் வழங்கிய உறுதிமொழிகள் தொடர்பாகவும் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.எதிர்க் கட்சித் தலைவர் அலு வலகத்தில் நேற்று நடைபெற்ற இப் பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித் திருப்பதாவது;

இலங்கையின் அரசியல் சட்ட திட்டங்களுக்கு முரணான வகையில் அரசியல் அமைப்பை மாற்றி அமைப்பதற்கு அரசாங்கம் தற்போது முயன்று வருகின்றது. இந்த முயற்சியானது அரசாங்கத்தின் குறுகிய அரசியல் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இந் நிலையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முன்னெடுப்புப் பற்றிப் பேச மிலிந்த அமெரிக்கா பயணமானார்

(கொழும்பு)

முன்னாள் விஞ்ஞானத் தொழில்நுட்ப மறுசீரமைப்பு அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மிலிந்த மொறகொட அமெரிக்கா பயணமாகியுள்ளார்.

இவர் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் றிச்சார்ட் ஆமிடேஜ், தெற்காசிய விவகாரங்களுக்கான இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா ஆகியோரைச் சந்தித்து சமாதான முயற்சியில் தற்போதைய நிலை தொடர்பாகவும், இலங்கைக்கான நிதியுதவிகளை வழங்கல் தொடர்பாகவும் கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தனிப்பட்ட முறையில் லண்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எதிர்வரும் 20ஆம்

(12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள்-இராணுவம் வவுணதீவில் சந்திப்பு

## பாதுகாப்பு நடவடிக்கையில் உடன்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் படையினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்படுவதென இருசாராரும் இணக்கம் கண்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் இடம் பெற்று வரும் வன்செயல்களை அடுத்து அம் மாகாணத்தின் பாதுகாப்புத் தொடர்பாகப் பாதுகாப்புப் படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று வவுணதீவில் நடைபெற்ற சந்திப்பிலேயே இருசாராருக்குமிடையே மேற்படி இணக்கம் ஏற்பட்டுள்ளதாகக் கண்காணிப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற இச் சந்திப்பில் பாதுகாப்புப் படைப்பிரி வின் சார்பில் கிழக்குப்பிராந்திய 23 வது படையணியின் பிரிகேடியர் வஜிரவிஜய குணவர்த்தன தலைமையிலான உயர் அதிகாரிகள் குழுவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் தளபதி ரமணன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேரரைத் தாக்கிய 6 எம்.பிக்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவர்

### ஹெல உறுமய தெரிவிப்பு


(கொழும்பு)

கடந்த வாரம் பாராளுமன்றில் பௌத்த குருமார்களைத் தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய 6 எம்.பிக்கள் மேல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவுள்ளதாக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. ஹெல உறுமயவின் ஆலோசகர் திலக் கருணாரட்ண இது பற்றித் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற ஒழுக்கக் குழு வழங்கும் தண்டனைகளைவிட இன்னும் அதிகமான தண்டனைகள் தேரரைத் தாக்கிய எம்.பிக்களுக்கு வழங்கப்படுமென எமது கட்சி நம்புகின்றது. எனினும் முதலில் பாராளுமன்ற ஒழுக்காற்றுக் குழுவினால் தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். பாராளுமன்ற ஒழுக்காற்றுச் சட்டத்தின்படி பாராளுமன்றத்தில் வைத்து தாக்குதல் மேற்கொண்டால் அவர்களுக்கான தண்டனைகள் பாராளுமன்றினாலோ அல்லது மேல் நீதிமன்றினாலோ வழங்கப்பட வேண்டும்.

தற்போது பொலிஸ் விசாரணைகள நடைபெற்று வருகின்றன. குற்றவியல் விசாரணைகள் நடாத்துவது தொடர்பாக சபாநாயகர் உடனும் சட்டமா அதிபருடனும் ஆலோசித்துள்ளோம். தேரர்கள் பாராளு

(12ஆம் பக்கம் பார்க்க)



அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று கிளிநொச்சியில் சந்தித்த போது..

# மனிதாபிமானப் பணிகளை ஒருங்கிணைக்க அரச சார்பற்ற நிறுவனங்களுடன் பேசினோம்

## சந்திப்புக்குறித்து சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

வடக்கு, கிழக்கில் பணியாற்றும் அனைத்துச சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும், ஐநா.முகவர் நிறுவனங்களுக்குமான கலந்துரையாடல் நேற்றுக் காலை 11.00 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தில் நடைபெற்றது.

திட்டமிடல் அபிவிருத்திச் செயலகப் பணிப்பாளர் தூயவன் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், திட்டமிடல் அபிவிருத்திச் செயலகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மாறன், சர்வதேச அரச்சார்பறற நிறுவனங்களினதும் ஐ.நா. நிறுவனங்களின் இணைப்பாளர் தயாகராஜா, அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி தமிழினி, சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் அனைத்து சர்வதேச அரசார்பற்ற நிறுவனங்களும், ஐ.நா. முகவர் நிறுவனங்களும் கலந்து கொண்டன.

இக்கூட்டம் குறித்து அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் தெரிவித்ததாவது;

கேள்வி: இன்றைய சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயம் என்ன என்று கூறுவீர்களா?

பதில்: இன்று நாங்கள் எமது தாயக பிரதேசத்தில் மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற ஐ.நா. அமைப்புக்களையும் தொண்டர் ஸ்தாபனங்களையும் அழைத்து இன்றைய நிலைப்பாடு சம்மந்தமாக கலந்துரையாடியிருக்கின்றோம். முக்கியமாக

(12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மன்னார், வவு.மாவட்டங்களில்

# 1,35,887 சதுர கி.மீ.பரப்பில் மிதிவெடிகள் அகற்றப்பட்டன

வவுனியா - மன்னார் மாவட்டங்களில் இராணுவ நடவடிக்கையின் போது புதைக்கப்பட்ட வெடிபொருட்களில் சிக்கி இதுவரை 40 பேர் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாக எ.்.ப்.எஸ்.டி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுவரை தமது அணியினரால் மன்னார், வவுனியா பிரதேசங்களில் ஒரு இலட்சத்து 35ஆயிரத்து 887 சதுர கிலோமீற்றர் பரப்பளவு துப்புரவு செய்யப்பட்டு இருப்பதாகவும் இதன இணைப்பாளர் பாலா தெரிவித்துள்ளார்.

அத்துடன் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் 196 கிராமங்களில் வெடிபொருட்கள் இருப்பதாக இனம் காணப்பட்டுள்ளதுடன். தம்மால் வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பிரதேசங்களிலிருந்து மிதிவெடிகள் 4 ஆயிரத்து 491 கனரக வாகன தகாப்பு வெடிபொருள் 8, கைக்குண்டு, எறிகணைகள், பரா வெளிசக்கூடு, சிறியரக வெடிபொருட்கள 4 ஆயிரத்து 423, புரப்பரைட்டாகள் 75 ஆயிரத்து 207 வெடிபொருட்களும் மீட்கப்பட்டு இருப்பதாக எ.்.ப்.எஸ்.டி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் ஓமந்தை, தாண்டிக்குளம், மல்லவராயன், கட்டையடம்பன், தலைமன்னார், பியர், பேசாலை போன்ற பிரதேசங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்களின் வாழ்வு உறுதிப்படுத்தப்பட்டு இருப்பதாகவும்,

தற்போது வவுனியா தாண்டிக்குளம், வவுனியா மன்னார் வீதி, மன்னாரின் சில இடங்களிலும் தமது அணியினர் பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

வவுனியா தாண்டிக்குளம் பாடசாலையில் இராணுவத்தால் கைவிட்டு செல்லப்பட்டதாகக் கருதப்படும் வெடிபொருட்களை எ.்.ப்.எஸ்.டி. நிறுவனம அகற்றிவருவது குறிப் பிடத்தக்கது.(உ)

## பாராளுமன்றில் தாக்கப்பட்ட

# தேரருக்கு சிகிச்சையளிப்பதில் வைத்தியர்கள் பாராமுகம்

ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் தாக்குதல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் சிறீசுமங்கள தேரரை வைத்தியர்கள் எவரும் முறையாகக் கவனிக்கவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கொழும்பு நவலோகா தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான சிறீசுமங்கள தேரரின் தந்தையாரே இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

வைத்தியசாலையில் தனது மகன் மிகவும் மோசமான வலி காரணமாகப புலம்பிக் கொண்டிருநததாகவும், இந்த வலி தொடர்பாக வைத்தியர்கள் எவருமே அதிக கவனம் செலுத்தவில்லை எனவும் சிறீசுமங்கள தேரரின் தந்தையார் புர்னாசந்திர தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தனது மகனுக்கு சிறந்த சிகிச்சையைப் பெற்றுக் கொடுக்கும் வகையில், தனது மகனை வேறொரு சிறந்த வைத்தியசாலைக்கு மாற்ற வேண்டுமெனவும் அவர் கோரிக்கைவிடுத்துள்ளார். (உ)

## வெளிநாட்டுத் தூதர்களை கூட்டமைப்பினர் சந்திப்பர்

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாகக் கொழும்பிலுள்ள அனைத்து வெளிநாட்டுத் தூதுவர்களையும் விரைவில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

இச்சந்திப்புக்களின் போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று, அதனடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீளஆரம்பிப்பதற்கான அழுத்தத்தினை சிறிலங்கா அரசாங்கத்துக்கு வழங்குமாறு வெளிநாட்டுத் தூதுவாகளிடம் கோரிக்கை முன்வைக்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினா என்.ரவிராஜ் தொிவித்துள்ளார். முக்கியமாக ஜனாதிபதியும், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி. பி.யும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடாபாகக் கூறிவரும் முரண்பாடான கருத்துக்கள் தொடர்பாக இச்சந்திப்புக்களின் போது தாம் விளககமளிக்கவுள்ளதாகவும் அவா தெரிவித்தார்.

இதேவேளை, விரைவில் இடம்பெறவுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்திய விஜயத்தின் போது, இந்தியாவின் ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினாகளையும் தாம் சந்திக்கவுள்ளதாகவும் தொிவித்த என்.ரவிராஜ், இதன் மூலம் இலங்கையின் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கான ஆதரவினை வழங்குமாறு இந்தியாவிடம் தாம் வேண்டுகோள்விடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

(உ-10)

## நயினை ஆலய உற்சவகால ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

(சுதுமலை)

எதிர்வரும 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள நயினாதீவு நாகபூஷணி அம்மன் உற்சவ காலத்தில் ஆலயச் சுழலில் ஏறபடும் குற்றச்செயல்களைத் தவிர்ப்பதற்கு ஆலய வளவினுள் தற்காலிக பொலிஸ்நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. மேற்படி ஆலய உற்சவகாலம் தொடர்பாக மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசாமி தலைமையில் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இதுவிடயம் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் அத்தியட்சகரிடம தொடர்புகொண்டு பொலிஸ்நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யமுடியும் எனக் கூட்டததில் ஊர்காவற்றுறைப் பொலிஸ நிலைய அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன, இம்முறையும் ஆலயச் சூழலில் மக்கள் நலன்புரிச்சங்கத் தொண்டர்களும் சென்ஜோனஸ் அம்புலன்ஸ் படையணியும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

குறிகட்டுவான் இறங்குதுறை மற்றும் கோவிலில் பக்தர்கள் கூடும் இடங்களிலும் தொண்டர் சேவைகள் நடைபெறும்.

மக்களின் போக்குவரத்துக்கு வசதியாக முக்கிய திருவிழாக்களில் வடபிராந்திய போக்குவரததுச் சபையின் மேலதிக பஸ்களை ஈடுபடுத்துவது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பயணிகள் நலன்கருதி யாழ்.பஸ்நிலையத்தில் குடிதண்ணீா விநியோகத்தை யாழ்.மாநகர சபையும் குறிகட்டுவான் கோவில் பகுதிகளில் வேலணை பிரதேச சபையும் மேற்கொள்ளுவது எனவும் இக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

(உ-252)

# இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை புலிகளிடம் வழங்கவேண்டும்

## வலி.கிழக்கு ச.ச.நிலையங்களின் சமாசம்

(யாழ்ப்பாணம்)

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை விடுதலைப்புலிகளிடம் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நாளை யாழ். நகரில் நடைபெறும் கண்டனப் பேரணியில் கலந்து கொள்ளுமாறு வலி.கிழக்கில் உள்ள சனசமூக நிலையங்களை சமாசம் கேட்டுக் கொள்கின்றது.

அன்றைய தினம் ஒவ்வொரு சனசமூக நிலையமும் தங்கள் கிராமத்து மக்களுடன் பங்குபற்றி இந்தப் பேரணியை வெற்றிபெறச் செய்யுமாறும் நாம் முன்வைத்துள்ள கோரிக்கையை உலகுக்கு எடுத்துக்காட்டுவதற்கு முழுப் பங்களிப்பையும் வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு கோரியுள்ளது வலி கிழககு சனசமூக நிலையங்களின் சமாசம்.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும்,

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சின்மூலம் அமைதித்தீர்வு காணும் இவ்வேளையில் இப்போது பிரச்சினைக்கு உள்ளாகி இருக்கின்ற விடயம் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையாகும். இப்போது சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் இடைக்கால அதிகாரசபையை விடுதலைப் புலிகளிடம் கொடுப்பதற்குத் தயக்கம்காட்டி வருகின்றது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசயல் தீர்வுதான் தீர்வு என்றும் அது பற்றித்தான் பேச்சு அமையும் எனவும் அரசு அறிவித்து வருகின்றது. இதன் மூலம் இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வை மேலும் இழுத்தடித்துச் செல்வதே அரசதரப்பின் நோக்கமாக இருக்கின்றது.

இன்று தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். சொந்த இடங்களில் இல்லாமல் அகதி முகாமிலும், நலன்புரி நிலையங்களிலும் அல்லல்படும் மக்களின் இயல்பு வாழ்வை ஏற்படுத்துவதற்காகவும் தொழில் இல்லாமல் கஷ்டப்படும் மக்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கவும் பலவிதமான துன்பங்களை எதிர்நோக்கும் தமிழ் மக்களின் வாழ்வை மேம் படுத்தவும் புனரமைப்புச் செய்யவும் உடனடியாக இடைக்கால அரசு விடுதலைப்புலிகளிடம் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது விருப்பமாகும் இதுவே இன்றைய தேவையுமாகும் இன்று தமிழர் தாயகத்தில் புனரமைப்பு புனர்வாழ்வு என சந்திரிகா அரசு கூறிக்கொண்டு சர்வதேச சமூகத்தை ஏமாற்றி நிற்கின்றது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

## பஸ்.சாரதிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பயணிகளின் உயிர்களுக்கு மதிப்பளிக்காது இலாபம் தேட முயற்சிக்கும் பஸ்சாரதிகள், நடத்துநர்கள் மீது கடும் சட்ட நடவடிககைகளை மேற்கொள்ளப் பொலிஸார் முடிவுசெய்துள்ளனர்.

குறிப்பாக அளவிற்கு அதிகமாக பஸ்ஸினுள் பயணிகளை ஏற்றிச் செல்லுதல், அதிவேகத்துடன் பஸ்களைச் செலுத்துதல், மிதிபலகைப பயணஙகளை அனுமதித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு எதிராகவே பொலிஸார் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளனர்.

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ள இந் நடமுறையின் கீழ், சம்பந்தப்படும சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு எதிராக நீதிமன்றததில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு கடும் தண்டனைகள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது.

அத்துடன், அதிக சத்தத்தை ஏற்படுத்துவதும் பாவனைக்கு உதவாததுமான பஸ்களை சேவையில ஈடுபடுத்துவோர் மீதும் பொலிஸாரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்கெதிரான இந்த திட்டங்கள் யாவும் நாடளாவிய ரீதியில் அமுலுக்கு வரும் எனவும் இது அமுலுக்கு வரமுன்னர் இவ்விடயம் குறித்துக் கவனம் செலுத்துமாறும் பஸ் உரிமையாளர்களுக்குப் பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(உ-4,64)

## புதிய முன்பள்ளி

(பருத்தித்துறை)

கற்கோவளம் புனித நகரில் புதிய முன்பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டிருந்த இக் கிராமச் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகள் இம் முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டதையடுத்துச் சீரடைந்துள்ளன.

இம் முன்பள்ளித் திறப்புவிழா புனித நகா கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் என்.சகாயநாதன தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

கற்கோவளம் வல்லிபுரம் கிராம சேவை உத்தியோகத்தா எஸ்.சிவசண்முகம் மங்கள விளக்கேற்றி வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பாணிப்பாளர் ரீ.சததியசீலன் சம்பிரதாயபூர்வமாக நாடாவை வெட்டி முன்பள்ளியைத் திறந்து வைத்தார்.

(உ-52)

# தொப்பிகல காட்டுப் பகுதியில் மோதல் எதுவும் இடம்பெறவில்லை

## மறுக்கிறது க.கா.குழு

(மட்டக்களப்பு)

தொப்பிகல காட்டுப் பகுதியில் எந்தவித மோதல் சம்பவங்களும் இடம்பெறவில்லை என இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக குழுவின் பிரதித்தலைவர் கொக்லன்ட் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டுப் பிரதேசமான தொப்பிகல காட்டுப் பகுதியில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக வெளியான செய்திகள் குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே கொக்லன்ட் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி பகுதியில் சில மோதல் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாக வெளியான தகவல்கள் குறித்து மாவட்டப் பிரதிநிதிகளிடமும் பொலிஸாரிடமும் கண்காணிப்புக் குழுவினர் விசாரணை செயதபோதும இதுபற்றி எந்தவித தகவல்களும் வெளியிடப்படவில்லை.

அத்துடன், இச்சம்பவங்கள் குறித்துத் தமக்கு எதுவித அறிககைகளோ முறைப்பாடுகளோ கிடைக்கப் பெறவில்லை எனவும் அவர் மேலும தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விடுதலைப்புலிகள் தரப்போ அல்லது அரச தரப்போ இச் செய்தி குறித்து எந்தத் தகவலையும் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-4)

### தார்மீகக்கோபங்கள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கலை இலக்கிய வட்டம் நடாத்தும் கோப்பாய் சிவன் எழுதிய "தார்மீகக் கோபங்கள்" சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் கல்லூரி அதிபர் இ.துரைஎங்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

(உ)

## ஆங்கிலதின மாவட்ட மட்டப் போட்டி அடுத்த மாதம்

(கோப்பாய்)

யாழ்.வலயப் பாடசாலைகளுக்கிடையேயான ஆங்கில தினப் போட்டி நிகழ்வுகள் சம்பந்தமான சுற்றறிக்கைகள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கோட்ட மட்டப் போட்டிகள் இம்மாதம் 23ஆம் திகதிக்கு முன்பாகவும், வலயமட்டப் போட்டிகள் எதிர்வரும் ஜூலை 5ஆம் திகதிக்கு முன்பாகவும், மாவட்ட மட்டப போட்டிகள் 14ஆம் திகதிக்கு முன்பாகவும் நடாத்தி முடிக்கப் படவுள்ளதாக யாழ்.மாவட்ட ஆங்கிலபாட உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.தியாகராசா தெரிவித்தார்.

(உ-79)

# தன் தலையில் தானே மண்ணை அள்ளிப்போடும் மணிரத்னம்

**த**மிழ் சினிமாவின் மகாக்களில் ஒருவராகக் கூறப்படும் மணிரத்னம் ஆய்த எழுத்து என்ற தனது உற்பத்தியை இப்போது சந்தைக்குவிட்டிருக்கிறார். அதில்தான் இந்த

செல்வநாயகம் என்கிற ஒரு அரசியல்வாதி வருகிறார். ஆய்த எழுத்தின் மோசமான அரசியல்வாதி செல்வநாயகம் யார்? என்ற கேள்வி பலரிடையேயும் எழுந்துள்ளது.

மணிரத்னம் நல்ல சினிமா இயக்குநர் என்பதற்கும் மேலாக, ஒரு சிறந்த தமிழ்த் தேசிய எதிர்ப்பு கருத்தாளர் என்பதை இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும்.

இவர் வெளியிட்ட இருவர் உள்ளிட்ட அனைத்துப் படங்களும் இதையே பறைசாற்றி நிற்கின்றன.

குறிப்பாக தமிழக தமிழர்களின் தமிழுணர்வை சிதைப்பதற்கே, நையாண்டி செய்வதற்கே மணிரத்னம் தனது படங்களைப் பயன்படுத்தி வந்தார்.

மறுபக்கம் ஈழத்தமிழரைக் காட்டி ஈழத்தமிழரிடம் வணிகம் செய்ய மணிரத்னம் உற்பத்தி செய்த கன்னத்தில் முத்தமிட்டால் படத்தில் ஈழத்தமிழரின் போராட்டத்தைக் கூறுவதற்கு வெளிக்கிட்டு அவரின் ஈழத்தமிழர் எதிர்க்கருத்தே அதில் வெளிப்பட்டது.

அதன் அடுத்த கட்டமாக

ஆய்த எழுத்து மணிரத்னத்தினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கதை இதுதான் ஒரு அடிதடிக்காரன் (ரவுடி) அது நடிகர் மாதவன். அவர் அரசியல்வாதி

செல்வநாயகத்துக்காக (இயக்குனர் பாரதிராசா) அடிதடி செய்கிறார். செல்வ நாயகத்திற்கு எதிராக கிளம்பும் பல்கலைக்கழக மாணவன் மைக்கேல் (சூர்யா) அவரின் கூட்டணியை ஒழிக்க முயலுகிறார். இதில் விபத்தாக மூன்றாவது நபர் (சித்தார்த்) நுழைகிறார். கடைசியில்

செல்வநாய[illegible]க்கு எதிராக தேர்தலில் மைக்கல் தலைமையிலான இளைஞர்கள் புரட்சிகர சிந்தனையுடன் வெற்றிபெற்று சட்டசபை செல்கின்றனர். புது தலைமுறை நேர்மையுடன் அரசியலில் நுழைவதுதான் படம்.

படத்தில் ஒரு முக்கிய

காட்சி மைக்கல் மாதவனால் சுடப்படும் காட்சி. அதில் சித்தார்த் மைக்கலைக் காப்பாற்றுவது படத்தின் முக்கால்பங்கு காட்சி இது. ஒரே



காட்சி மாதவன் பார்வையில் **(POINT OF VIEW) FLASH BACK** சூர்யா பார்வையில்




**FLASH BACK** சித்தார்த் பார்வையில் ஒரு **FLASH BACK** என ஆய்த எழுத்தில் மூவரிடம் ஒரு காட்சியை

மணிரத்னம் **FLASH BACK** க்குகளாகக் காட்டியுள்ளார்.

ஆனால் ஆய்த எழுத்தின் வில்லனாக வருக

பாத்திரத்திற்குச் சூட்டப்பட்டுள்ள பெயர் செல்வநாயகம். தமிழக பாரம்பரியத்தில் செல்வநாயகம்

என்ற பெயர் யாருக்கும் சூட்டப்படுவதாக நாம் அறிந்ததில்லை. எனவே தங்கள் மத்தியில் வழக்கிலில்லாத ஆனால்,

ஈழத்தமிழர்களின் புகழ்பூத்த

அரசியற் தலைவரின் பெயரை மணிரத்னம் திட்டமிட்டே பயன்படுத்தியுள்ளாரா என்ற கேள்வி

ஈழத்தமிழரிடையே எழுவது தவிர்க்க முடியாதது.

ஈழத்தமிழர்களின் சாத்வீக போராட்டத்தின் தந்தையாக இருந்தவர்

எஸ்.ஜே.வி செல்வநாயகம, தமிழகத்தில் ஈ.வெ.ரா. பெரியார் தமிழக மக்களால் உரிமையுடன் தந்தை பெரியார் என அழைக்கப்பட்டது போன்றே, ஈழத்தில் எஸ்.ஜே.வி செல்வநாயகம் ஈழத்தமிழர்களால் உரிமையுடன் தந்தை செல்வா என அழைக்கப்பட்டார்.

இருவர் என்ற திரைப்படத்தில் தந்தை பெரியாரை கொச்சைப்படுத்திய மணிரத்னம், ஆய்த எழுத்தில் ஈழத்தின் அறவழிப் போராட்ட நாயகனான தந்தை செல்வாவை கொச்சைப்படுத்துகிறாரா என்ற கேள்வியை ஈழத்தமிழன் கேட்கத் தூண்டுகின்றது.

தமிழக சினிமா ஈழத் தமிழனை வைத்து பிழைத்து வருகின்ற இன்றைய நிலையில்,

ஈழத்தமிழனையே தொடர்ந்து கொச்சைப்படுத்தும் இவ்வாறான பாங்கு அனுமதிக்கப்படலாமா என்பதே இப்போது ஈழத்தமிழன் ஒவ்வொருவனின் கேள்வியாகவுமுள்ளது.

ஒரு சில நல்ல திரைப்படங்களான நந்தா,

காற்றுக்கென்ன வேலி போன்றவற்றைத் தவிர, மிகுதியானவற்றில் ஈழத்தமிழர்களை எள்ளி நகையாடும் பாத்திரங்களே படைக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, புன்னகை மன்னன், தெனாலி, நளதமயந்தி, கன்னதில் முத்தமிட்டால் போன்றவற்றை ஈழத்தமிழர்களை எள்ளி நகையாடும் திரைப்படங்களாகச் சுட்டிக்காட்டலாம்.

இன்று தங்களது படத்தின் பொருளாதார ரீதியான வெற்றிக்கு புலம்பெயர்ந்து ஈழத்தமிழர்கள் வாழும் மேற்குலக நாடுகளின் திரையரங்குகளையே நம்பியிருக்கிற தமிழக சினிமாவின் முக்கியமானவர்கள் அதே ஈழத்தமிழர்களை எள்ளி நகையாடுவதையும் தமது வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள்.

இதிலும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழுகின்ற நாடுகளிலேயே,

ஈழத்தமிழர்களின் துணையோடு வெளிநாட்டுப் படப்பிடிப்புக்களைச் செலவுச் சிக்கனத்தோடு மேற்கொள்ளும் தமிழக சினிமாவின் தமிழ்த்தேசிய எதிர்ப்பு முதலாளிகள், நடிகர்கள் மறுபுறத்தே ஈழத்தமிழர்களையே பதம் பார்த்து வருகிறார்கள்.

ஆய்த எழுத்து செல்வநாயகம் மூலம் ஈழத்தமிழரால் அதிகம் உச்சரிக்கப்பட்ட அறவழிப் போராட்ட அரசியற்தலைவரான தந்தை செல்வா என்ற எஸ்.ஜே.வி செல்வநாயகம் பற்றிய விம்பத்தை சிதைப்பதாக சூட்டப்பட்ட பெயர் இல்லையென்பதை மணிரத்னம் மறுத்துரைப்பாரா?

ஈழத்தமிழர்களின் மன உணர்வுகளை, போராடும் குணத்தை அறிந்த மணிரத்னத்துக்கு, ஏன் ஒரு தமிழக அரசியல்வாதியின் பெயரை சூட்ட முடியாமல் அல்லது மனமில்லாமல் போனது?

இதற்கான பதிலை மணிரத்னம் தரப்போவதில்லை, இவ்வாறானவற்றிற்கான பழியை வசனகர்த்தா சுஜாதா (ரங்கராஜன்) மீது போட்டுத் தப்பிக்க முயற்சிக்கலாம். ஆனால் மணிரத்னத்திற்கான பதிலை, தமிழக சினிமாக்காரர்களிற்கான பதிலைத் தருவதற்கு ஈழத்தமிழர்கள் தயாராகவே உள்ளனர்.

இனிமேலும் இவ்வாறான நிகழ்வுகள் தமிழக சினிமாக்களிலே இடம்பெற்றால் அத் திரைப்படங்களை மேற்குலகில் பகிஷ்கரிப்ப தற்கும், திரைப்பட நட்சத்திரங்கள் காசு பார்க்கும் நட்சத்திர இரவுகளைப் புறக்கணிப்பதற்கும்



ஈழத்தமிழர்களை மணிரத்னம் தயாராக்கி விட்டுள்ளார்.

எனவே மணிரத்னம் ஈழத்தமிழனிற்கு தீமை செய்யப் போய், புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களிடையே தமிழக சினிமா குறித்த வெறுப்பை மேலும் தீவிரப்படுத்தி ஒட்டுமொத்த தமிழக சினிமாவையும் வெறுப்புடன் ஈழத்தமிழன் நோக்கும் ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளார்.

தமிழக சினிமா உலகம் இதுபற்றிச் சிந்திக்குமா?

நன்றி
தமிழ் இணையத்தளம்

உலக சுற்றுச் சூழல் தினம் ஜுன் –05



World Environment Day- June-05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழம்.

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்

நிலப்பரப்பில் 11.5 சதவீதமான பிரதேசங்கள் பாதுகாக்கப்பட, கடல் வாழிடத்தில் பாதுகாக்கப்படும் பகுதியின் அளவு 0.5 சதவீதத்துக்கும் குறைவாகவே இருக்கிறது.

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்
### வினாத்தாள் இல: 06

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:**

1) ப.துஷா - யா/ இந்து ஆரம்பப் பாடசாலை.
2) பா.அனிதா - யா/வடமராட்சி இந்து ம.க.
3) ந.சங்கீதன் - யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
4) இ.தனுஷியா - யா/இந்து ஆரம்பப் பாடசாலை
5) கி.நிஷாந்தினி - யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.
6) ச.தர்பிகா - யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.
7) ஜெ.திவ்வியன் - யா/வதிரி திருஇருதயக் கல்லூரி.
8) சி.றூபின் - யா/காசிநாதர் வித்தியாலயம்.
9) யோ.ஜெறோசன் - யா/வதிரி திருஇருதயக் கல்லூரி.
10) சு.ஞானவேல் - யா/மத்திய கல்லூரி.
11) ப.பிரவீனா - யா/நெல்லியடி மே.மி.த.க. பாடசாலை.
12) கு.கஜனன் - யா/உடுப்பிட்டி அமெரிக்க மி.கல்லூரி.
13) கே.சுபாகரன் - யா/வதிரி திருஇருதயக் கல்லூரி.
14) சி.ஆரணி - யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
15) பா.ஜெனோஜன் - யா/சங்கானை அ.மி.த.க. பாடசாலை.
16) வ.இலக்ஷினா - யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
17) செ.சஜேந்திரன் - யா/புனித பத்திரியாசிரியார் கல்லூரி.
18) இ.மயூரெதன் - யா/உரும்பிராய் சைவ த.வித்தி.
19) தெ.கனிஷ்டன் - யா/கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை.
20) க.தயானா - யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
21) யோ.லோசுதன் - யா/மாணிக்கவாசகர் வித்தி.
22) ஜெ.சாத்திராக் - யா/மத்திய கல்லூரி.
23) கோ.சுபர்ஷன் - யா/நவாலி மகா வித்தியாலயம்.
24) ஹீ.பிறோமிளா - யா/கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தி.
25) இ.கஜலக்ஷி - யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
26) சி.இளவேந்தன் - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு
27) சி.கவிதா - யா/ அராலி சரஸ்வதி ம.வித்தி.
28) அ.சுபேதன் - யா/துன்னாலை காசிநாதர் வித்தி.
29) க.ரமனுஜா - யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி.
30) சி.துளசிகா - யா/கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்.
31) உ.கயூரி - யா/புனித தெரேசா மகளிர் கல்லூரி.
32) லோ.கஜனா - யா/பண்டத்தரிப்பு ம.உயர் த.பாடசாலை.
33) செ.தேனுகா- யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தி.
34) ஆ.சசிந்தா- மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
35) சே.இந்துவி- மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
36) ம.பவன்- மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
37) பு.கீர்த்தனா - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
38) ப.காந்தி - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
39) பு.லக்ஷனா - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
40) பு.லதுஷா - யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
41) சோ.சோபிதாஸ் - யா/பெரியபுலம் மா.வித்தி.
42) த.காந்தினி - யா/கலட்டி மெ.மி.த.க. பாடசாலை.
43) தே.சாமினி - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
44) க.கீதா - யா/வல்வை மகளிர் ம.வித்தி.
45) வி.டினேஸ் - யா/ஆனைப்பந்தி மெ.ம.வித்தி.
46) க.லக்ஷனா - யா/துன்னாலை காசிநாதர் வித்தி.
47) ந.யதர்ஷன் - யா/ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தி.
48) ச.கௌசிகா - யா/சாவச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
49) வி.கிருஷ்ணதீபா - யா/நயினாதீவு நாகபூசணி வித்தி.
50) க.சியாமி - யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.
51) த.தபோஜனன் - யா/இணுவில் ம.கல்லூரி.
52) சௌ.கோபிராஜ் - யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.
53) க.மேரிஜெஸ்மின் - யா/வல்வை ம.ம.வித்தி.
54) ரி.செந்துஜா - யா/சாவச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
55) நே.ஜோன்கரன் - யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.
56) ந.திஷானா - யா / உடுவில் மகளிர் கல்லூரி.
57) பா.பாலபத்மன் யா/புற்றளை ம.வித்தி.
58) கு.கீர்த்திகா - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
59) சி.அபிராமி - யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
60) செ.ஆன்டனியா - யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வித்தி.
61) ச.சத்தியா - யா/மீசாலை வீரசிங்கம் ம.வித்தி.
62) அ.அலோயறயனி - யா/வல்வை மகளிர் ம.வித்தி.
63) வி.கபிலன் - யா/கோப்பாய் நாவலர் வித்தி.
64) சி.சிவதர்சன் - யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.
65) ர.ரஞ்சிதன் - யா/கரவெட்டி கிழக்கு த.க. பாடசாலை.
66) கு.அபிராமி - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
67) கு.சலோ[illegible] - யா/புனி[illegible] கல்லூரி.
68) வி.முகுந்தன் - [illegible]நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை.
69) இ.கிருஷ்சிகா - யா/சாவச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
70) த.நினுஜா - யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி.
71) இ.கிருபாகரன் - யா/துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலை.
72) ஜெ.கிஷேபன் - யா/தி.இ.த.க. பாடசாலை.
73) செ.டுபின்சன் - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
74) த.கௌரி - யா/வல்வை மகளிர் ம.வித்தி.
75) வி.கல்யாணி - யா/வல்வை றோ.க.த.க. பாடசாலை.
76) நி.வித்தியா - யா/வல்லை மகளிர் ம.வித்தி.
77) ஜெ.மயூரிஜெயா - யா/வல்வை றோ.க.த.க. பாடசாலை.
78) செ.கலையரசி - யா/வல்வை மகளிர் ம.வித்தி.
79) பி.ஜெயக்குமார் - யா/வல்வை அ.மி.க. பாடசாலை.
80) பி.சர்மிளா - யா/வல்வை மகளிர் ம.வித்தி.
81) க.செல்வி - யா/வல்வை மகளிர் ம.வித்தி.
82) பு.வினஜா - யா/வல்வெட்டி விநாயகர் வித்தி.
83) பி.லக்ஷிகா - யா/வல்வை அ.மி.க. பாடசாலை
84) பி.ஜேதிகா- யா/வல்வை சிவகுரு வித்தி.
85) வி.கஸ்தூரி - யா/வல்வை றோ.க.த.க.பாடசாலை.
86) த.சாம் நிரோசன் - யா/பரியோவான் கல்லூரி.
87) சௌ.ராஜகுமாரி - யா/வல்வை சிவகுரு வித்தி.
88) இ.சிந்துஜா - யா/சோதிவேம்படி வித்தி.
89) ச.லர்சியா - யா/திருநெல்வேலி இந்து த.க.பாடசாலை.
90) சி.பகீரதன் - யா/சங்கானை சிவப்பிரகாச வித்தி.
91) ர.டில்ஷன் - யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.
92) வ.நிலோஜன் - யா/நாவந்துறை றோ.க.வித்தி.
93) சி.மதீசன் - யா/கைதடி முத்துக் குமாரசாமி வித்தி.
94) சே.திவாகரன் - யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.
95) கு.அகிதா - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
96) வி.தினேஸ் - யா/மத்திய கல்லூரி.
97) க.திவ்வியா - யா/மல்லாகம் கனிஷ்ட வித்தி.
98) க.லக்சன் - யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.
99) இ.நிலான் சஜீவுன் - யா/மத்திய கல்லூரி.
100) ச.சிந்துஜா - யா/அராலி சரஸ்வதி ம.வித்தி.
101) சு.சுமேன்ன - யா/தேவரையாளி இந்துக் கல்லூரி.
102) சி.சிவதர்சன் - யா/புற்றளை ம.வித்தி.
103) வி.பிரவீனா - யா/நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை
104) தூ.பேணாட் - யா/சென்ஜோன்ஸ் கல்லூரி.
105) ச.நிவேதிகா - யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
106) சு.கீர்த்தனா - யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.
107) த.ராகவன் - யா/வதிரி திருஇருதயக் கல்லூரி.
108) ஜெ.கோவர்த்தனி - யா/குப்பிளான் விக்கினேஸ்வரா ம.வித்தி.
109) ச.ரோகினி - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
110) கி.மகிழினி - யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
111) ம.வதனி - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
112) பா.யாதவராஜ் - யா/கோப்பாய் நாவலர் தமிழ்வித்தி.
113) யோ.விதுர்ஷன் - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
114) இ.றஜித்தா - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
115) ம.ஜான்சி - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
116) பா.சத்திய கென்- யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
117) செ.கௌசிகா - யா/வட இந்து மகளிர் கல்லூரி.
118) ஜெ.சாளினி - யா/உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை.
119) ர.சல்பியா - யா/உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை.
120) யு.பயிந்தன் - யா/உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை.
121) உ.பிரியதர்சினி - யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
122) த.தர்சிகன் - மாண்வர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
123) அ.லொஜிடன் -யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
124) த.தர்சிக - யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
125) அ.டியூக் பிரியந் - யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
126) சா.துஷ்யந்தினி - யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
127) ஜெ.சத்ஜீசன் - யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
128) து.நிலாம்ஸ் - யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
129) ர.மேரிஜெனிபா - யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
130) யோ.கயசிந் - யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
131) த.ஜனனி - யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
132) இ.ஜெயப்பிரியா - யா/தும்பலை சிவப்பிரகாச ம.வித்தி.
133) க.கெய்திகா - யா/வீரசிங்க் ம.வித்தி.
134) செ.சசித்தா - மாணவர் முன்னேற்ற நிலையம் சாவற்கட்டு.
135) யோ.சுபிஷாயினி - யா/மகாஜனக் கல்லூரி.
136) கை.சுரேன் - யா/யாழ்ப்பாணக் கல்லூரி.
137) ந.லட்ஷிகா - யா/அ.த.க.பாடசாலை.
138) அ.மோகன்ரூபன் - யா/துன்னாலை காசிநாதர் வித்தி.
139) வி.திவாகரன் - யா/யாழ்ப்பாண மத்திய கல்லூரி.
140) வே.விதுர்ஷன் - யா/சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.





யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியொதுக்கீட்டின் கீழ், தலா 2 இலட்சம் ரூபா பெறுமதியான ஆட்டோக்களை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மற்றும் உடுவில் மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கு வழங்கியுள்ளார். அவற்றை அந்தந்தப் பாடசாலை அதிபர்களிடம் கையளிப்பதைப் படங்களில் காணலாம்.

**குறிப்பு :**
அன்பு மாணவர்களே! உங்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்கான விடையை எழுதும்போது, விடைக்கான இலக்கங்களையும், பாடசாலையின் பெயரையும், உங்கள் பெயரையும் தவறாது எழுதுங்கள். எழுதத் தவறும் இடத்து உங்கள் பெயர் பிரசுரிக்கப்படமாட்டாது என்பதை மிகவும் வேதனையுடன் தெரிவிக்கின்றோம்.

**5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் -08**

மாணவர் முழுப்பெயர்: ..................................

பாடசாலை முகவரி : ..................................

வீட்டின் முகவரி : ..................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 23.06.2004 இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

**வலம்புரி**
கல்விப்பகுதி,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக் கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்ப வும். வினா இலக்கங்களை சரியா கக் குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

சுக்கர் வெளியீடு

## வினாத்தாள் 06 விடைகள்

01. i) பயறு, பூசணி
ii) வெண்டி, கத்தரி
iii) கப்பல், இதரை, கதலி, சாம்பல்மொந்தன்
iv) சாம்பல்மொந்தன்
v) வெங்காயம்
02. i) பனையோலை
ii) ஆற்றுநீர்
iii) தேரோடும்
iv) பலாவிலை
03. i)மணி + ஓசை
ii) வயல் + கரை
iii) கடல் + கரை
iv) ஆடு + குட்டி
04. i)கமலாவும் விமலாவும் பாட்டுப் பாடினார்கள்.
ii) பாலனும் நசீரும் பந்து அடித்தார்கள்.
iii) ஆடும் மாடும் புல் மேய்ந்தன.
05. i)என்னிடம் இருந்தால் தருவேன். இப்பொழுது என்ன செய்யப்போகின்றீர்கள்.
ii) உங்கள் வீட்டில் இன்று என்ன கறி மகனே.
iii) பஸ்ஸில் வரும்போது விழுந்துவிட்டது.
06. காலைவேளை.
07. i)பல்லி
ii) அட்டை
iii) திருக்கை
iv) கணவாய்
v) நண்டு
08. i) Birthday
ii) Circle
iii) Fruit
iv) Sky
09. i)வயது
ii) பொழுதுபோக்கு
iii) நீலம்
iv) உணவு
10. i) (3) x) (1)
ii) (2)
iii) (4)
iv) (2)
v) (1)
vi) (3)
vii) (1)
viii) (3)
ix) (2)
11. i)A
ii) B
iii) A
iv) B
v) A
12. i)சதுரமுகி, தாயக்கட்டை
ii) கனவுரு, தீப்பெட்டி
iii) உருளை, சீவாத பென்சில்
iv) கூம்பு, சீனிச்சுருள்
v) கோளம், பந்து
13. நிமலன், கமலன், விமலன்
14. **4/9, 1/2, 8/16, 1/4**
15. 120 **cm**
16. 8.35
17. ஆங்கிலம்
18. 3
19. **D**
20. **10 Kg** பஞ்சு
21. [illegible]
22. [illegible]உரு, சதுரமுகி
23. 999 999
24. 225 **Km**
25. ♦எழுத்துப் பிழைகளின்றி இருத்தல்.
♦கூறியது கூறலாக இருக்கக் கூடாது.
♦தலைப்பிற்கு பொருத்தமானதாக இருக்க வேண்டும்.
♦எழுத்து மொழியில் மட்டுமே எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

## *கனடா சைவசித்தாந்த மன்றத் தலைவருக்கு பாராட்டு விழா*

கனடா சைவ சித்தாந்த மன்றத் தலைவர் தி.விசுவலிங்கத்திற்கு காரைநகர் ஈழத்துச் சிதம்பர மணிவாசகர் சபையினரும் காரைநகர் தியாகராஜா மத்திய மகா வித்தியாலய சமூகத்தினரும் இணைந்து நடத்தும் மாபெரும் பாராட்டுவிழா இன்று காலை 8.00 மணிக்கு காரைநகர் தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது. வித்தியாலய அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நல்லை ஆதன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிய பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையும், காரைநகர் சைவ மகா சபைத் தலைவர் க.தில்லையம்பலம், செஞ் சொற்செல்வர் ஆறு திருமுருகன் ஆகியோர் பாராட்டுக்களையும் வழங்கவுள்ளனர். விழா நாயகனை சிவஸ்ரீ கலாநிதி பண்டிதர் க.வைத்தீஸ்வரக் குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கவுள்ளார். (உ-246)

# சதாம் ஆதரவு தீவிர வாதிகளின் பார்வை ஈராக் இடைக்கால அரசு மீது

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பகதாத்தில் மறறொரு மூத்த ஈராக் அதிகாரி சதாம் ஹுசேன் ஆதரவுத் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஈராக் தலைநகர் பக்தாத்தில் முன்னாள ஈராக் அதிபர் சதாம் ஹுசேனின் ஆதரவுத் தீவிரவாதிகளான சன்னி முஸ்லிம் தீவிரவாதிகள் அமெரிக்கக் கூட்டுப் படையினரை எதிர்த்து அடிக்கடி வன்முறைத் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந நிலையில் அமெரிக்க கூட்டுப் படையினரால ஈராக் இடைக் கால அரசின் அதிகாரிகளாக நிய மிக்கபபட்டுள்ளவர்களின் மீது இப்போது சன்னி முஸ்லிம் தீவிர வாதிகளின் கவனம் திரும்பியுள் ளது.

இதனால், பல ஈராக் அதிகாரி கள் இடைக்கால அரசு உருவான இரண்டொரு வாரங்களிலேயே சுட் டுக் கொலலப்பட்டு வருகின்றனர்.

இதற்கு முதற் கட்டமாக, ஈராக் இடைக்கால அரசாங்கத்தின் துணை வெளியிறவுத்துறை அமைச் சராக நியமிக்கப்பட்டிருந்த பஸாம் குபா கடந்த வெள்ளியன்று தனது அலுவலகத்திற்கு காரில் சென்ற போது, சதாம் ஆதரவுத் தீவிரவாதிக ளால் வழிமறித்து சுட்டுக் கொல்லப் பட்டார். சமீபத்தில் ஐ.நா சபைக்குச் சென்று வந்த ஈராக் குழுவில் முக் கிய அதிகாரியாக இடம் பெற்றி ருந்த குபா இரண்டு திணங்களுக்கு முன்பு தான் நியூயோர்க்கில் இருந்து ஈராக் திரும்பியிருந்தார். மேலும் சதாம் ஆதரவுத் தீவிர வாதிகளால் முதல் முதலாக படுகொலை செய்யப்பட்ட ஈராக் இடைக்கால அர சாங்கத்தின் முதல் அதிகாரியும்அவரே ஆவா் இதையடுத்து ஈராக்இடைக்கால அரசின் கலாசாரத்துறை அமைச்ச கத்தின் இயக்கு நராக இருந்த கமல் ஷாரா என்பவர் நேற்று முன்தி னம் அவதுவீடுக்கு முன்புஅடை யாளம் தெரியாத தீவிரவாதிகளால் சுடுக்கொல ல்ப்பட்டார். (உ-9)


காலஞ்சென்ற முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரேகனின் நினைவிடம் அருகே எல் ஒரோவே ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் கொடித் தினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

# கென்யாவுக்கு டிமிக்கி விட்டார் அமெரிக்கா தேடிய தீவிரவாதி

(மும்பாசா)

அமெரிக்காவால் தேடப்படும் பயங்கரவாதியை சரிவர அடை யாளம் தெரியாமல் கோட்டை விட்டது கென்யா பொலிஸ்.

அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்தவர் பசல் அப்துல்லா முகமது கிழக்கு ஆபிரிக்கப பகுதி யில் அல்கெய்டாவின் தலைவ ராகச் செயற்பட்டு வந்தார். ஏற் கனவே திருடப்பட்ட கிரெடிட அட் டையைப் பயன்படுத்தி நகை வாங்க முறபட்டபோது, இவரை மும்பாசாவில் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்த னர். ஆனால், பொலிஸார் பிடி யிலிருந்து கடந்த சனிக்கிழமை தப்பிவிட்டார் பசல். திருடப் பட்ட பொருட்களைக் கைப் பற்று வதற்காக பசலின் வீட்டுக் குப் பொலிஸார் சென்றனர். அப் போது விலங்குகளால பசல் பிணைக்கப்படவில்லை. அந்த இடத்திலிருந்த பெண்களும் மன நிலை சரியில்லாத ஒருவரும் பொலிஸாரிடம் வாக்குவாதம் செய்தனர். இச் சந்தர்ப்பத்தைப பயன்படுத்தி ஏ.கே. 47 துப்பாக் கிகளையும், பிஸ்டல்களையும் கொண்டிருந்த 7 பொலிஸாரை யும் ஏமாற்றிவிட்டு தப்பினார் பசல். குரங்குபோல் தாவி கத வருகே சென்றார். அவர் முறை யான பயிற்சி பெற்றவர் என்பதை இதன் மூலம் உணர முடிந்தது. மின்னல் போல மறைந்துவிட் டார் என்றார் ஒரு பொலிஸ்கா ரர். அதன் பிறகு தான் பசல் ஒரு அதிபயங்கரவாதி என்பதும் கிழக்கு ஆபிரிக்காவில் 1998 இல் அமெரிக்கத் தூதரகங்களில் நடைபெற்ற குண் வெடிப்புக்க ளுக்காகத் தேடப்படுபவர் என்ப தும் தெரியவந்தது. அவரைப் பிடித்துத் தருபவர்களுக்கு ரூ.112 கோடி பரிசாக வழங்கப்படும் எனவும் அமெரிக்கா அறிவித் திருந்தது. பசல் தங்கள் வசம் இருந்தபோதும் சரிவர அடை யாளம் காணாமல் விட்டுவிட்ட னர் கென்ய பொலிஸார். இத்த னைக்கும் கென்ய பொலிஸ் நிலைய சுவர்களில் பல ஆண்டு களாக பசலின் புகைப்படங்கள் ஒட்டப்பட்டுள்ளன. ஓராண் டுக்கு முன்பு பசல் கைது செய்யப் பட்டு இதே போல் அடையா ளம் தெரியாமல் விடப்பட்டுள் ளார். கடந்த முறை சிறையில் இருந்து வெளியே வந்தவுடன் கென்யாவில் 2002 ஆம் ஆண்டு நவம்பரில் அல்கெய்டாவின் தாக்குதல நடைபெற்றன. இதற்கு மூளையாக இருந்தவர் பசல் தான். அப்போது வாகனத்தில் வெடி மருந்துகளை நிரப்பிக் கொண்டு ஜீப்பில் சென்ற பயங்கரவாதிகள் இஸ்ரேலிய ருக்குச் சொந்தமான ஹோட்ட லைத் தாக்கினர். இதில் 15 பேர் கொல்லப்பட்டனர். மேலும் இஸ் ரேலிய விமானத்தை தாக்க முயற்சித்தனர். ஆனால், இஸ்ரே லிய விமானம் தப்பியது. அமெரி க்காவுக்கு ஆபத்து விளைவிக் கக் கூடியவர்கள் என தெளிவாக அறியப்பட்டுள்ள 7 பேரின் பட்டி யலில் பசலின் பெயரும் இடம் பெற்றுள்ளது. (உ-09)

# முன்னாள் அமெ. அதிபரின் இந்நாள் சாதனை

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் தந்தையும் முன்னாள் அதிபருமான ஜோர்ஜ் எச்.டபிள்யூ புஷ் தமது 80வது பிறந்தநாளைக் கொண்டாடும் விதத்தில் 13ஆயிரம் அடி உய ரத்தில் இருந்து பரசூட்டில் குதித் தார்.

இதை தமது பிறந்த நாளான கடந்த ஞாயிற்றுக் கிழமை அவர் நிகழ்த்தினார். அதிபர் மாளிகை யின் நூலகத்துக்கு மேல் அவர் பரசூட்டில் குதித்தவேளை, மேகக கூட்டங்கள் மிகவும் தாழ்வாக இருந்தன.

காற்றின் தன்மை ஆகியவற் றைக் கருத்தில் கொண்டு பர சூட்டில் புஷ் குதித்த போது அவ ருக்குப் பாதுகாப்பு அரணாக இரா ணுவ பரசூட் வீரர்களும் குதித்து அவருடனேயே தரையிறங்கினர்.

புஷ் தரையிறங்கும் போது அவரது மனைவி பார்பரா அவரது மகனும் புளோரிடா மாகாண கவர்னருமான ஜெப் புஷ் மற்றும் சோவியத் யூனியனின் முன்னாள் அதிபர் மிகையில் கோர்பச்செவ் ஆகியோர் ஆரவாரம் செய்து அவரை உற்சாகப்படுத்தினர்.

இது என் வாழ்வில் மறக்க முடியாத சிறந்த நாள் என்று தரையிறங்கியதும் கூறினார் புஷ்.

மீண்டும் பரசூட்டில் தனியாக குதிக்கப்போவதாகக்கூறிய புஷ் எப்போது அது நடைபெறும் எனக் கூறிவில்லை.

80 வயதுக்குப் பிறகும் வாழ்க்கை உண்டு என்பதை பர சூட்டில் குதித்து வயதான இளை ஞர்களுக்கு உணர்த்தியுள்ளார். புஷ் தனது 75வது பிறந்த நாளின் போது பரசூட்டில் தனியாக குதித்து சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. (உ)




# முஸ்லிம்களைக் கொன்று குவித்ததை சேர்பியர் ஒத்துக் கொண்டனர்

(பொஸ்னியா)

ஆயிரக்கணக்கான முஸ் லிம்களைக் கொன்று குவித்த தாக செர்பியர்கள் முதன்முறை யாக ஒப்புக் கொண்டனர்.

2-ம் உலகப் போருக்குப் பிறகு பொஸ்னியா வில்ஸ்ரெபி னிகாவில் சர்வதேச மனித உரி மைச் சட்டத்துக்குப் புறம்பாக ஆயிரக்கணக்கான முஸ்லிம் கள் 1995 இல் படுகொலை செய்யப்பட்டனர்.இதை பொஸ் னிய-செர்பியா விசாரணைக் கமிட்டி ஓர் அறிக்கையில் தெரி வித்துள்ளதாக சர்வதேச அதி காரி ஒருவர் கூறியுள்ளார்.

இத் தகவலை பொஸ்னியா வின் சர்வதேச நிர்வாகி பேடி ஆஷ்டவுனை மேற்கோள் காட்டி அவரது செய்தித் தொடாபாளர் வெர்தன் பெர்சிக் கூறினார்.

இது மிகவும் கொடூரமானது என்று போர்க் குற்றங்களை விசாரிக்கும் நெதர்லாந்தில் ஹேக் நகரில் உள்ள டிரிபியூ னல் தெரிவித்துள்ளது.

பொஸ்னியா இராணுவ வீரர் கள் ஐ.நா பாதுகாப்பு மண்டலத் தில் தங்கியிருந்த 8 ஆயிரம் முஸ்லிம் ஆண்கள் மற்றும் இளைஞர்களைக் கொன்று குவித்தனர். (உ)

# ஷெரோனின் பலம் மீண்டும் நிருபணம்

(ஜெருசலேம்)

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனின் காஸாத் திட்டத்துக்கு எதிராக நேற்று முன்தினம் இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்விய டைந்துள்ளது.

இதன்மூலம் ஏரியல் ஷெரோன் பாராளுமன்றத்தில் தனது பலத்தினை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த 6ஆம்திகதி ஏரியல் ஷெரோனின் காஸாத் திட்டததுக்கு இஸ்ரேலிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியில் முடிவடைந்து சில மணித்தியாலங்களின் பின்னர் மேற்குக் கரை நகர் ஒன்றில் இஸ்ரேல் படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 3 பலஸ்தீனப் போராளிகள் கொல்லபபட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலை இஸ்ரேலிய இராணுவத்தினர் உறுதிப் படுத்தியுள்ளனர். (உ-9)

# புற்றுநோய் ஆய்வுக்கு நிதி சேகரிக்கும் 8 வய்துச் சிறுமி

புற்று நோயால் பாதிக்கப்பட்ட 8 வயது அமெரிக்கச் சிறுமி அலெக் ஸாண்ட்ரா ஸ்காட், எலுமிச்சை குளிர்பான விற்பனை மூலம் புற்றுநோய் ஆய்வுக்காக 10 இலட்சம் டொலர் (ரூபா 4.50 கோடி) நிதியை திரட்டி வருகிறாள்.

அமெரிக்காவின் பொன்சில் வேனியா மாகாணத்தில் உள்ள வெயின்வுட் பகுதியைச் சேர்ந்த இந்த 8 வயது சிறுமி அலெக்ஸா ண்ட்ரா ஸ்காட் முதல் பிறந்த நாளைக் கொண்டாட இரண்டு நாட்கள் இருக்கும் போது இந்தச் சிறுமிக்கு நியூ ரோபிளாஸ்டமா என்ற ஒருவகை புற்றுநோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

நரம்பு மண்டலத்தைப் பாதிக்கும் இந்த நோய் வந்தால் உயிர் பிழைப்பதறகான வாய்ப்புக்கள் 40 சதவீதம் தான் உள்ளது. இந்த நிலையில் சிறுமி அலெக்ஸாண் ட்ராவுக்கு 4 வயது இருக்கும் போது தன்னை அணு அணுவாகக் கொனறு வரும் புற்று நோய் ஆரா ய்ச்சிக்கு நிதிதிரட்ட முடிவு எடுத்தாள்.

எலுமிச்சை குளிர்பான விற்பனை மூலம் தேவையான நிதியை திரட்ட முடிவு செய்த சிறுமி தன்னுடைய நோக்கத்தைக் கூறி விற்பனையைத் தொடங்கினாள் ஒரே நாளில் 2000 டொலர் நிதி திரண்டது. அதன் பன் கடந்த நாலு ஆண்டுகளாகத் தன்னுடைய உறவினர்கள் மூலமும் நண்பர்கள் மூலமும் எலுமிச்சை குளிர் பானத்தை விற்பனை செய்து வருகிறாள். இது வரை இரண்டு இலட்சம் நிதி திரண்டுள்ளது. (உ-9)

# வடகொரியா அணுவாயுதச் சர்ச்சை தென்கொரியா, ஜப்பான் ஆகியன அமெரிக்காவுடன் கூடி ஆராய்ந்தன

(சியோல்)

வட கொரிய அணுவாயுத சர்ச்சை தொடர்பாக தென கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள அமெரிக்காவுடன் நேற்று முன்தினம் பேச்சுக்களை நடத்தியுள்ளன.

அடுத்தவாரம் நடைபெற வுள்ள 6தரப்புப் பேச்சுவார்த் தைகளில் அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகளின் நிலைப்பாடு தொடர்பாக ஆரா யவே இந்தக் கூட்டம் இடம்பெற் றுள்ளது.

அடுத்த வாரம் வடகொரியா, தென்கொரியா, சீனா, ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய 6 தரப்புப் பேச்சுவார்த்தைகள் மீண் டும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 21அம் திகதி இப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமா கும் என்று எதிர்பார்க்கப்படுகின் றது.

எனினும். இப்பேச்சுவார்த்தை களை ஆரம்பிப்பதற்கான திகதி தொடர்பாக வட கொரியோவுடன் சீனா ஆராய்ந்து வருவதாகவும், எதிர்வரும் 23ஆம்திகதி இப்பேச் சுக்கள் ஆம்பமாகும் சாத்தியம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

வடகொரியாவின் அணுத் திட்ட சர்ச்சை தொடர்பாக ஏற் கனவே 2தடவைகள் நடைபெற்ற 6தரப்பு பேச்சு வார்த்தைகளில் எவ்வித முடிவுகளும் எட்டப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக் கது. (உ-9)

# சிறுவர்களுக்கு எதிரான குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த சர்வதேச பொலிஸின் அனுசரணை

(கொழும்பு)

சிறுவர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்படும் பலதரப்பட்ட குற்றச் செயல்களையும் கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச - பொலிஸ் அமைப்பின் இன்ரபோல் உச்சக்கட்ட ஒத்துழப்புத்தேவையென பொதுமக்கள் பாதுகாப்பு சட்ட ஒழுங்கு தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக்ரணவிராஜ தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச் சாட்டுக்களை விசாரணை செய்யும் நிபுணர்களின் இரண்டாவது மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் அரசாங்கம் தீவிர கவனஞ்செலுத்தியுள்ளது.

இவைதவிர சர்வதேச வலைப்பின்னல் ஊடாக சிறுவாகளை தமது காமவேட்டைக்கு இரையாக்க முனையும் 700 நபர்கள் தொடர்பான தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

இவ் 700 நபர்களுக்கும் எதிராக விரைவில் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என்றார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பொலிஸ்மா அதிபா இந்திரா டி சில்வா உரையாற்றுகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் சிறுவர்களையும் பெண்களையும் பாதுகாக்கும் வகையில் பிரத்தியேகமான பணியகம் உருவாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

(உ-60,10)


# விவாத அரங்கு 3

விடயம்

A–9 பாதை தமிழர் கலாசாரத்திற்கு

விடிவைத் தருமா? அல்லது அழிவைத் தருமா?

விவாத விடயத்தை முன்வைக்கிறார் வரணியூரைச் சேர்ந்த A. சங்கீதா.

நடுவர்:-

ஈழத்தின் பிரபல எழுத்தாளர் பொன். கணேசமூர்த்தி (முகாமையாளர் மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளை)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்புங்கள்

அனுப்பவேண்டிய முகவரி:-

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.



## அன்பார்ந்த மாணவர்களே!

வரும் திங்கள் முதல்

வலம்புரியில்

க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்

வெளிவரவிருக்கின்றன.



## அன்பு வாசகர்களே!

அலைகடல் சூழ் மணிபல்லவத்தில் (நயினாதீவு) வீற்றிருந்து நம்மையாளும் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இம்முறையும் வழமைபோல்

நயினை நாகபூசணி அம்மன் பாமால்லை

உங்கள் வலம்புரியில் இடம்பெறவுள்ளது. உங்கள் பாமாலைகளை "நயினை அம்மன் பாமாலை" வலம்புரி, இலக்கம் 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.


## கட்டடக்கலை விரிவுரை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சமகாலக் கட்டடக்கலை குறித்த படங்களுடன் கூடிய விரிவுரை ஒன்று இன்று பி.ப. 4.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

நுண்கலைத்துறையும், கலைவட்டமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த விரிவுரையை அடங்காத் தமிழன் சுந்தரலிங்கத்தின் பேரனும் இலங்கையில் கட்டடக்கலையில் முதற்பட்டமும் இலண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பையும் பெற்றுக் கொண்ட கட்டடக்கலையில் உலகப்புகழ் பெற்றவரான ஜெப்றி புவானின் கீழ் பயிற்சி பெற்றவருமான சி.அஞ்சலேந்திரன் நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வலர்கள்,துறைசார்கலைஞர்கள், நகர, புனர் நிர்மாண, திட்டமிடல் அதிகாரிகள் ஆகியோர் இதில் பங்கு பற்றவுள்ளனர்.

(உ)

## பொங்கல் விழா

(பருத்தித்துறை)

புலோலி தோட்டத்து, ஞான வைரவர் ஆலய வருடாந்த ஆனிப் பொங்கல் விழா,எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பி.ப.3.00 மணியளவில் பொங்கல் குளிர்த்தியுடன் விஷேட பூஜையும் நடைபெறவுள்ளது. (உ-52)

## திருவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி புதிய சிவன் ஆலய வருடாந்த ஆலங்காரத் திருவிழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

(உ)

## வருடாந்த உற்சவம்

(கோப்பாய்)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 29,30ஆம் திகதிகளில் முறையே தேர்,தீர்த்தத் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

(உ-79)

✧ ✧ ✧

(பூநகரி)

பூநகரி முழங்காவில் செவ்வ யோக சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 9,10ஆம் திகதிகளில் முறையே தேர், தீர்த்தத் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன. (உ)

## சிரமதானம்

(கோப்பாய்)

உலக சுற்றாடல் சூழல் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை கோப்பாய் மத்திய கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட பொது அமைபுக்கள் கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்தைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (உ-79)


# வலம்புரி - சங்குநாதம்

## பிரதேச செய்தியாளர்கள் (பயிலுனர்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

பின்வரும் பிரதேசங்களில், பிரதேச செய்தியாளர்களை (பயிலுனர்கள்) நியமிப்பதற்கான விண்ணபபங்கள் கோரப்படுகின்றன.

- ♦ பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் க.பொ.த. (சா/த) இல் சித்தியடைந்தவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- ♦ பயிலுனர் தரத்தில் மூன்று மாதங்கள் ஈடுபடுத்தப்படுவர். இக் காலத்தில் சேவையில் திருப்தியும் ஒழுங்கும் - ஆர்வமும் காணப்படுமடத்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.
- ♦ பயிலுனராக தெரிவு செய்யப்படுபவர்கள் நிறுவனத்துடன் பிணை ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
- ♦ குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே அந்தந்தப் பிரதேச செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- ♦ இலங்கையில் இருந்து வெளிவரும் எந்தப் பத்திரிகையிலும், ஊடகங்களிலும் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.
- ♦ ஏற்கனவே பத்திரிகைத்துறையில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிப்பின் அவர்கள் நிரந்தரச் செய்தியாளர்களாக உள்ளீர்க்கப்படுவர்.

### தகுதியானவர்கள்

முழுப்பெயர், நிரந்தரமுகவரி, தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ. இல, விவாக நிலை, தொழில்புரியும் இடம், பதவி (இருப்பின்), கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு, பிரதேச சபைப் பிரிவு, தொலைபேசி இலக்கம் (இருப்பின்) கல்வித்தகைமை, பிறதகைமை என்பவை உள்ளிட்டதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை,

பிரதம ஆசிரியர்,
வலம்புரி, சங்குநாதம்,
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு 20.06.2004க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ, அன்றி தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்கான அறிவித்தல் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

நிர்வாக உத்தியோகத்தர்

### பிரதேச செய்தியாளர் (பயிலுனர்) தெரிவிற்கான பிரதேசங்கள்

#### வலிகாமம்

திருநெல்வேலி
நல்லூர்
கந்தர் மடம்
கோண்டாவில்
கொக்குவில்
மானிப்பாய்
உரும்பிராய்
சண்டிலிப்பாய்
சங்கானை
சித்தங்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை
தாவடி
இணுவில்
மருதனார்மடம்
சுன்னாகம்
மல்லாகம்
தெல்லிப்பழை
நாவாந்துறை
வண்ணார்பண்ணை
கொட்டடி
பாசையூர்
நாயன்மார்கட்டு
கல்வியங்காடு
நீர்வேலி
சிறுப்பிட்டி
ஆவரங்கால்
அச்சுவேலி
இடைக்காடு
புத்தூர்
ஊரெழு
புன்னாலைக்கட்டுவன்
அச்செழு
குப்பிளான்
ஓட்டுமடம்
நீராவியடி
அத்தியடி
அரியாலை

#### தீவகம்

மண்டைதீவு
அல்லைப்பிட்டி
வேலணை
புங்குடுதீவு
நயினாதீவு
நெடுந்தீவு
அனலைதீவு
எழுவைதீவு
சுருவில்

கரம்பொன்
நாரந்தனை
சரவணை

#### வடமராட்சி

கரணவாய்
நெல்லியடி
நவிண்டில்
வல்வெட்டி
வல்வெட்டித்துறை
தொண்டைமானறு
துன்னாலை
அல்வாய்
வியாபாரி மூலை
கொற்றாவத்தை
நாகர்கோவில்
செம்பியன்பற்று
மணற்காடு
பொலிகண்டி

#### தென்மராட்சி

நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்
சாவகச்சேரி
மீசாலை
மட்டுவில்
சரசாலை
கொடிகாமம்
வரணி
மிருசுவில்
எழுதுமட்டுவாள்
முகமாலை
பளை

#### வன்னிப் பிராந்தியம்

கிளிநொச்சி
வட்டக்கச்சி
முருகண்டி
மல்லாவி
மாங்குளம்
வவுனிக்குளம்
கனகராயன் குளம்
நெடுங்கேணி
புளியங்குளம்
முல்லைத்தீவு
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு
விசுவ மடு

# பி.செ.பிரிவுகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளின இறுதிநாள் நிகழ்வுகள் அண்மையில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றன. நடைபெற்று முடிந்த போட்டிகளின் முடிவுகள் வருமாறு,

**பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டி நிகழ்ச்சிகளின் முடிவுகள்**

| நிகழ்ச்சி | நிலை | பெயர் | பிரதேச செயலர் பிரிவு |
|---|---|---|---|
| நீளம்பாய்தல் | 1ஆம் இடம்- | தி.வாசுகி | யாழ்ப்பாணம் |
| | 2ஆம் இடம்- | அ.துஷாந்தினி | வேலணை |
| | 3ஆம் இடம்- | வ.சயந்தினி | வேலணை |
| 5000 மீற்றர் | 1ஆம் இடம்- | சி.சிவறஞ்சினி | சண்டிலிப்பாய் |
| | 2ஆம் இடம்- | ந.மேசி | சண்டிலிப்பாய் |
| | 3ஆம் இடம்- | என்.சுமதி | சண்டிலிப்பாய் |
| 200 மீற்றர் | 1ஆம் இடம்- | செ.தயாளினி | பருத்தித்துறை |
| | 2ஆம் இடம்- | ந.ஸ்ரீவித்யா | சங்கானை |
| | 3ஆம் இடம்- | எஸ்.மேரிரஜிதா | தெல்லிப்பழை |
| தட்டெறிதல் | 1ஆம் இடம்- | க.சேதுப்பிரியா | தெல்லிப்பழை |
| | 2ஆம் இடம்- | ந.கருணாகலாதேவி | நெடுந்தீவு |
| | 3ஆம் இடம்- | இ.தர்சினி | சாவகச்சேரி |
| ்00 மீற்றர் தடை தாண்டல் | 1ஆம் இடம்- | செ.தயாளனி | பருத்தித்துறை |
| | 2ஆம் இடம்- | அ.அனற்நிராஜினி | சண்டிலிப்பாய் |
| | 3ஆம் இடம்- | இ.தர்சினி | சங்கானை |
| 1500 மீற்றர் | 1ஆம் இடம்- | ந.மேசி | சண்டிலிப்பாய் |
| | 2ஆம் இடம்- | இ.அனுசியா | சாவகச்சேரி |
| | 3ஆம் இடம்- | செ.அனுஷா | சண்டிலிப்பாய் |
| ஈட்டியெறிதல் | 1ஆம் இடம்- | க.சேதுப்பிரியா | தெல்லிப்பழை |
| | 2ஆம் இடம்- | ந.கருணாகலாதேவி | நெடுந்தீவு |
| | 3ஆம் இடம்- | ச.சுவந்தினி | தெல்லிப்பழை |
| 4x100 மீற்றர் அஞ்சல் | 1ஆம் இடம்- | சங்கானை அணியினர் | |
| | 2ஆம் இடம்- | உடுவில் அணியினர் | |
| | 3ஆம் இடம்- | சண்டிலிப்பாய் அணியினர் | |
| 4x400 மீற்றர் அஞ்சல் | 1ஆம் இடம்- | சண்டிலிப்பாய் அணியினர் | |
| | 2ஆம் இடம்- | பருத்தித்துறை அணியினர் | |
| | 3ஆம் இடம்- | நல்லூர் அணியினர் | |

(உ-68)



சில்வர்ஸ் ரோனில் நடைபெற்ற அதியுயர் மோட்டார் சயிக்கிள் உலக சம்பியன் போட்டியில் கலந்துகொண்ட இத்தாலி நாட்டவரான மோரோ கன்ஸினி வளைவில் திரும்பும்போது கட்டுப்பாட்டை இழந்து தடம்புண்டு கிடக்கும் காட்சி.

## பரு-பிரதேச செயலர் பிரிவு அணி யாழ்-மாவட்ட சம்பியனாகத் தெரிவு

யாழ்.மாவட்ட பிரதேச செயலா பிரிவுகளுக்கிடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிக ளின் அனைத்துப் போட்டிகளி னதும் முடிவுகளின் படி,பருத்தித் துறைப் பிரதேச செயலர் பிரிவு அணி 67.5 புள்ளிகளைப் பெற்று 2004ஆம் ஆண்டுக்கான சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ் துரை யப்பா விளையாட்டரங்கில் நடை பெற்ற மெய்வல்லுநர் போட்டி இறுதி நிகழ்வுகள் மற்றும் பரிசளிப்பு வைப வத்தின் போது,சிறப்பு விருந்தின ராகக் கலந்து கொண்ட யாழ்.பல் கலைக்கழக உபவேந்தர் பேரா சிரியர் எஸ்.மோகனதாஸ், பருத் தித்துறைப் பிரதேச செயலர் பிரிவு அணிக்கு சம்பியன் கேடயத்தினை வழங்கி கௌரவித்திருந்தார்.

மேலும் அனைத்துப் போட்டி முடிவுகளின் படி தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவு அணி 51.5 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தினைப் பெற்றுள்ளது.

அத்துடன் ஆண்களுக்கான மெய்வல்லுநர் போட்டி முடிவுகளின் படி 49புள்ளிகளைப் பெற்ற சண்டி லிப்பாய் பிரதேச செயலர் பிரிவு மெய்வல்லுநர் அணி முதலாம் இடத்தினையும் 34புள்ளிகளைப் பெற்ற தெல்லிப்பளை பிரதேச செய லர் பிரிவு அணி இரண்டாம் இடத் தையும் பெற்றிருந்த அதேவேளை, பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டி முடிவுகளின் படி 50புள்ளி களைப் பெற்ற சண்டிலிப்பாய் பிர தேச செயலர் பிரிவு அணி முதலாம் இடத்தினையும், தலா 18 புள்ளிக ளைப் பெற்றிருந்த தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு மெய்வல்லுநர் அணிகள் இரண்டாம் இடத்தினை யும் பெற்றுக்கொண்டன.(உ-68)

# முரளிதரன் பெயரில் பயிற்சி நிலையம்

இலங்கை கிரிக்கெற் அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளரும் உலக சாதனைப் பந்து வீச்சாள ருமான முத்தையா முரளிதரனின் பெயரில் சுழல்பந்து வீச்சாளர் களுககான பயிற்சி நிலையமொன்றை நிறுவுவதற்கு இலங்கை கிரிக்கெற் நிறுவனம் முன்வந்துள்ளது.

உலகின் டெஸ்ட் கிரிக்கெற் அரங்கில் அதிகூடிய டெஸ்ட் விக் கெற்றுக்களைக் கைப்பற்றி உலக சாதனையை ஏற்படுத்தியிருக்கும் முத்தையா முரளிதரனை கௌர விப்பதாக இது அமையுமென இலங்கை கிரிக்கெற் நிறுவகம் தெரிவித்துள்ளது.

இந்த சுழல்பந்து வீச்சாளர் பயிற்சி நிலையம் முரளிதரனின் சொந்த ஊரான கண்டியில் அல் லது கொழும்பில் நிறுவப்படவி



ருக்கின்றது. இதற்கு இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் ஜிவன் குமாரதுங்கவின் பூரண ஆதரவு கிடைக்கப்பெற்றிருப்பதாக வும் இலங்கை கிரிக்கெற் நிறு வகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென நியமிக்கப்பட்டுள்ள ஏற்பாட்டுக்குழுவில் மைக்கல் டி சொய்ஸா, செல்வபெருமகள், ஜெயானந்தவர்ணவீர, லூசியன் நிரனகே, மகிந்த வியஜசிங்க மற் றும் டேமியன் பெனாண்டோ ஆகி யோர் இடம் பெற்றுள்ளனா.(உ-68)



ரெக்ஸஸ் றேன்ஜனாச் சேர்ந்த அல்யொன்சோ செரியானே சென்ற லூஸியஸ் கார்டினலுக்கு எதிரான கிரிக்கெற் போட்டியில் மட்டை ஏந்தி விளையாட ஆரம்பிக்கும் உசார் நிலையில் நிற்கிறார்.

## விளையாட்டுச் செய்திகள்



ஐரோப்பிய சாம்பியன் கோப்பை கால்பந்தாட்ட போட்டிகள் போர்த் துக்கலில் தொடங்கியுள்ளது.. போட்டிகளைக் காண ஆயிரக்கணக்கான கால்பந்தாட்ட ரசிகர்கள் திரண்டிருந்தனர். லிஸ்பனில் நடைபெற்ற பிரான் ஸ், இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டியைக் காண வந்திருந்த இங்கிலாந்து ரசிகை ஒருவர் தலையில் இங்கிலாந்து நாட்டு கொடியை சூடியிருக்கும் காட்சி.

## யாழ். மாவட்ட உதைபந்தாட்ட வீரர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த பெப்ரவரி மாதம நடை பெற்ற தமிழீழதேசிய விளையாட்டு விழாவில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணி வீரர் கள் அனைவரையும் இன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம் பமாகவுள்ள பயிற்சிகளுக்காக மாலை 4.00மணிக்கு வருகை தருமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி இ.றோகான்றாஜசிங்கம் கேட்டுள்ளாா.

மேலும் யாழ்.மாவட்ட உதைபந் தாட்ட அணித்தெரிவில் புதிதாக இணைந்து கொள்ளவிரும்பும் உதை பந்தாட்ட வீரர்களையும், தங்கள் பிரதேச செயலர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் ஊடாக இன்றைய தினம் ஆரம்பமாகவிரக்கும் பயிற்சிக ளில் இணைந்து கொள்ள முடியு மெனவும் இம்மாத இறுதியில் மன் னாரில் நடைபெறவுள்ள வடக்கு-கிழக்கு மாகாணமட்ட உதை பந் தாட்டப போட்டி நிகழ்வில் கலந்து கொள்ளும் பொருட்டு யாழ்மாவட்ட உதைபந்தாட்ட அணித் தெரிவு மற்றும் பயிற்சிகள் நடைபெறவி ருப்ப தாகவும் மாவட்ட விளையாட்டு அதி காரி தெரிவித்துள்ளார். (உ-68)

# இன்று ஒரு தகவல்

## அதிர்ச்சி வைத்தியம்

ஒரு சீடன் வெளியூர் புறப்படுவதற்காகத் தயாராகிக் கொண்டிருந்தான். நீண்டதூரம் போகப்போகிறான். திரும்பவர நாளாகும். புறப்டுவதற்கான ஆயத்தவேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தான்.

அந்த சமயம் பார்த்து இன்னுமோர் சீடன் அவனிடம் வந்தான. "நமது குரு உன்னை அழைத்துக்கொண்டு வரச் சொன்னார் வா" என்று கூப்பிட்டான். இவன் உடனே புறப்பட்டுச் சென்றான். குருநாதரைப் பார்த்தான். அவரது காலில் விழுந்து வணங்கினான். அவ்வளவு தான். குரு ஏதாவது உபதேசம் செய்வார் என்று எதிர்பார்த்தான். ஆனால் நடந்தது என்ன தெரியுமா? குரு அவனுக்கு ஓங்கி ஒரு அடிகொடுத்தார்.

எதிர்பாராமல் இந்த அடியை வாங்கியதும் அந்த சீடன் அதிர்ந்து போய்விட்டான். பக்கத்திலிருந்த மற்றய சீடர்களும் திகைத்துப் போய் நின்று விட்டனர். அடி வாங்கிய சீடனுக்கு மனதிற்குள் குழப்பம்.

"நான் என்ன தப்புச் செய்தேன் புறப்படும் நேரத்தில் இப்படிக் குருவிடம் அடிவாங்கும்படி ஆகிவிட்டதே" என்று நினைத்து மனதிற்குள் மிகவும் வேதனைப்பட்டான். சிறிது துணிவை வரவழைத்துக்கொண்டு குருநாதரிடமே கேட்டுவிட்டான்.

"சுவாமி! நான் என்ன தவறு செய்தேன்? என்னை இப்படி அடித்து விட்டீர்களே! ஒருவார்த்தை கூட நான் உங்களை எதிர்த்துப் பேசியதில்லையே. இவ்வளவு காலமாக உங்கள் விருப்பத்திற்கு விரோதமாக ஒரு காரியமும் செய்ததில்லையே! வந்ததும் வராததுமாக ஒன்றும் சொல்லாமல் என்னை அடித்து விட்டீர்களே! குருவே நான் செய்த குற்றம் தான் என்ன என்று கண்ணீருடன் பரிதாபமாகக் கேட்டானாம் அந்த சீடன்.

ஆனால் அந்த குருவின் முகத்தில கொஞ்சம் கூட கோபமில்லை. அவர் சிரித்துக்கொண்டே நின்று கொண்டிருந்தாராம். அதன் பின் சொன்னாராம் "என் அருமைச் சீடனே! நீ ஒரு தவறும் செய்யவில்லை நான் உன்னை அடித்தது நீ ஏதோ தவறு செய்து விட்டாய என்பதற்கல்ல. நீண்ட பயணம் போகப்போகிறாய ஞாபகமாக ஏதாவது கொடுத்தனுப்ப வேண்டாமா? நீ ஞானம் பெற்ற பின்புதான் திரும்பி வரப்போகிறாய் என்பது எனக்குத் தெரியும் . அதற்குப் பின்பு உன்னை அடிக்க முடியுமா? அதனால் இப்போது கிடைத்திருக்கும் இந்த வாயப்பைப் பயன்படுத்திக்கொண்டேன்" அப்போதைக்கு இப்போதே அடித்துவிட்டேன். அவ்வளவு தான் வேறு ஒன்றுமில்லை" என்றாராம்.

குரு சிரித்துக்கொண்டே இப்படிச் சொன்னாராம். இருந்தாலும் இதுவும் ஒரு உபதேசம் தான். அதிர்ச்சிகளால் விழிப்படைய வைப்பதும் ஒரு வழிதான். ஜென்வழி பெரும்பாலும் அதிர்ச்சியின் மூலமாகவே ஞானதரிசனத்தை அருள்கின்றவர்கள் ஜென்மகுருமார்கள்.

நமது தியானம் தான் ஜென். இந்தியாவிலிருந்து இது சீனாவிற்குச் சென்று கொஞ்சம் பெயர்மாறி வளம்பெற்று ஜப்பானில் ஜென்னாகி வளர்ந்துள்ளது அவ்வளவு தான். ஜென் என்பது தியானம். எதை நினைத்தும் தியானிப்பதில்லை. எல்லாவற்றிலும் தியானம் இருப்பதாகச் சொல்கிறது ஜென். பேசுவது, இருப்பது, நடப்பது, உண்பது, சிரிப்பது, தூங்குவது, தொழில் செய்வது அல்லது சும்மா இருப்பது எல்லாமே தியானம்.

ஜென் ஒரு சுயதரிசனம்.தன்னைத் தானே அடையாளம் கண்டுகொள்வதுதான் அது.இல்லாத எதையும் தேடிக்கண்டுபிடிப்பதில்லை.ஜென் மார்க்கத்தைப் பற்றி ஓஷோ என்ன சொல்கிறார் தெரியுமா? "காணாமல் போன தனது மூக்குக் கண்ணாடி தன் மூக்கின் மேல் இருப்பதைக் கண்டுகொள்வது போன்றது ஜென்" என்கிறார்.

நமது ஆள் ஒருவர் இன்னொருவரின் முகத்தை நீண்டநேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். "என்ன பார்க்கின்றீர்கள்?" என்றார் அவர்.நீங்கள் போட்டிருக்கிறீர்களே மூக்குக் கண்ணாடி அதைத்தான் பார்க்கிறேன்" என்றார் இவர். "நீங்கள் அப்படிப்பார்ப்பதற்கு விசேட காரணம் ஏதாவது உண்டா? "என்று கேட்டார அவ்."உண்டு" என்றர் இவர். 'என்ன? என்று கேட்டார். "நேற்றுக் காணாமல் போன என்னுடைய மூக்குக் கண்ணாடி அது" என்றார் இவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தொழிற் சங்கங்களின் தலையீட்டை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது

## யாழ். பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களினதும் முக்கியமான பரீட்சைகள் நடைபெறுகின்ற இக் கால கட்டத்தில் மீண்டும் ஓர் வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறுகிறது. இதனால் மாணவர்களுக்கு ஏற்படப்போகும் இழப்புக்கள் பற்றி பல்கலைக்கழக அபிவிருத்தியில் அளவு கடந்த அக்கறை கொண்டுள்ள(!?) பொறுப்பான தொழிற்சங்கங்கள் அறிந்தபோதும் போராட்டங்களை நடத்துகின்றன.

பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தின் உயர் தலைமைத்துவம் கடந்த காலங்களில் கடைபபிடித்த மென்போக்கான அணுகுமுறையும் பல்கலைக் கழகத்தில் நிர்வாக நடவடிக்கைகளில் மூக்கை நுழைத்து மோப்பம் பிடிக்கும் காவல்துறையினராகி "விசில்ஊதும்" அளவிற்கு ஒரு சில தரப்பினரை வளர்த்துவிட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் அனைத்து சமூகத்தினரும் இவ் விடயம் தொடர்பாகத் தமது ஆழ்ந்த கவனத்தையும் பங்களிப்பையும் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதே இவ்வறிக்கையின் நோக்கமாகும்.

யாழ். பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் விடுத்துள்ள அறிக்கையில் இவ்விதம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும்,

தொழிற்சங்கங்கள் தமது செயற்பாடுகளை தமது வரையறையினுள் நின்று மேற்கொள்வதே அழகு. ஊழியர்களின் நலன்களுக்காகப் பாடுபடும் அவர்களின் உரிமையை யாரும் தடுக்க இயலாது.

ஊழியர்கள் கடமைக்கு உரிய நேரத்திற்கு வருவதை உறுதி செய்வதற்காக நேரப்பதிவு இயந்திரத்தை நிர்வாகம் அறிமுகப்படுத்திய போது அதனைத் தடுத்து நிறுத்திய செயலை இதற்கான சிறு உதாரணமாகக் குறிப்பிடலாம். இதனூடாக ஊழியர்கள் கடமைக்கு நேரத்திற்கு சமுகமளிக்காது விடுவதற்கும், கடமை உதாசீனத்திற்கும் தொழிற் சங்கங்கள் துணைபோவதாகவே தெரிகிறது.

பேரவையின் முடிவுகளை அமுலாக்குவது மட்டுமே நிர்வாகிகளின் கடமையாகும்.பேரவையின் முடிவுகளைத் தனிப்பட்ட முறையில் நிர்வாக உத்தியோகத்தர்களோடு தொடர்புபடுத்தி அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்துப் போர்க்கொடி தூக்குவது சரியானதல்ல.

வேலை நிறுத்தப்போராட்டங்களில் பிரதானமாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு பல்கலைக்கழகத்தின் நிதி விரயமாக்கப்படுகிறது என்பதாகும். கடந்த 2 ஆண்டுகளில் 30 நாட்கள் வேலைநிறுத்தங்கள் நடத்தப்பட்டுள்ளன. வேலை நிறுத்தத்தின் போது வீணாகும் மனித வலுவிற்கான செலவீனம் நாளொன்றிற்குக் கிட்டத்தட்ட 600,000 ரூபா ஆகும். எனவே இரு ஆண்டுகளில் இடம்பெற்ற வேலை நிறுத்தங்களின் போது இழக்கப்பட்ட மனித வலுவிற்கான செலவீனம் கிட்டத்தட்ட 18 மில்லியன் ரூபாவகும். இது தவிர சொத்துக்களுக்கும் உபகரணங்களுக்கும் ஏற்படும் இழப்புகளும் கணிசமானவை. 2003ஆம் ஆண்டு நடைபெற்ற் வேலை நிறுத்தத்தின் போது விஞ்ஞான பீட சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பு 1 மில்லியனுக்கும் அதிகம.

எடுத்ததெற்கெல்லாம் வேலை நிறுத்தம் செய்து மில்லியன் கணக்கான நிதியிழப்பை ஏற்படுத்திக் கொண்டு பல்கலைக்கழக நிதி விரயமாக்கப்படுகிறது என முதலைக் கண்ணர் வடிப்பது நகைப்பிற்கிடமானது.

தமகது சாதகமான விடயங்களுக்கு மட்டும் ஏனைய பல்கலைக்கழகங்களை மேற்கோள்காட்டுவதும் ஏனைய விடயங்களை இருட்டடிப்புச் செய்வதும் குழப்பமான அணுகுமுறைகளாகும்.

6000ற்கும் அதிகமான மாணவர்களுக்குக் கல்வி வழங்கும் இந்நிறுவனம் சிறுசிறு விடயங்களுக்காகவும் தமக்கு அப்பாற்பட்ட விடயங்களுக்காகவும் தொழிற்சங்கங்கள் போராட்டங்களை நடத்துவதால் முடக்கப்படுவதனை மாணவர்கள் தொடர்ந்து அனுமதிப்பார்களா என்பது கேள்விக்குறியாகும். இதை சம்பந்தப்பட்ட தரப்புக்கள் தெளிவாகப் புரிந்துகொள்வது நல்லது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகததர் சங்கம் இது விடயத்தில் தெளிவான நிலைப்பாட்டைக்கொண்டுள்ளது. ஊழியர்களின் உரிமைகளையும அவர்களுக்கு வேண்டிய நீதிகளையும் பெற்றுக்கொள்ள எமது அமைப்பும் அதன் ஒவ்வொரு உத்தியோகத்தரும் உதவுவதற்கு என்றும் தயாராகவுள்ள அதேவேளை பல்கலைக்கழகத்தின் இயக்கத்தினை அடிக்கடி முடக்குவதனையும் நிர்வாக விடயங்களில் தொழிற்சங்கங்களின் வரையறைக்கு அப்பாற்பட்ட தலையீடுகளையும் வன்மையாகக் கண்டிப்பதுடன் அவற்றினைத் தொடர்ந்தும் பல்கலைச் சமூகம் அனுமதிக்காது என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறது.

போராட்டங்களின் போது கோரிக்கைகளை நியாயமானதாகவும் குற்றச்சாட்டுக்களை சரியான தகவல்களின் அடிப்படையின்றி முன்வைப்பதையும் அநாகரீகமான முறையில் அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு சுவரொட்டிகளை ஒட்டுவதையும் நிறுத்துமாறு எமது சங்கம் கேட்டுக் கொள்கிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-19)

# இராசி பலன்

**16.06.2004**

**(ஆனி 02, புதன்கிழமை)**

**சதுர்த்தசி பின்னிரவு 12.11 வரை**

**ரோகிணி முழுவதும்**

**இராகுகாலம் 11.53-1.23 மணிவரை**

**சுபநேரம் 4.23-5.53 மணிவரை**

**மேடம்**
மதிப்புக் குறைவு, பொருள் விரயம், தொழில் நன்மை, மாதர் நட்பு.

**இடபம்**
நண்பர்கள் உதவி, ஆழ்ந்த சிந்தை, புதிய பொருள் சேர்க்கை, சயன சுகம்.

**மிதுனம்**
கோபப்படுதல், பணவிரயம், உஷ்ண வியாதி, காரியம் தாமதம்.

**கடகம்**
தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, குடும்ப சுகம்.

**சிங்கம்**
சுபநிகழ்ச்சி, கடின உழைப்பு, எடுத்த கருமங்கள் கைகூடும், நல்ல வருமானம்.

**கன்னி**
ஆன்றோர் மதிப்பு, வயிற்று வலி, உடல் உழைப்பு, அச்சமான நிலை.

**துலாம்**
எதிர்பாராத அச்சம், போசன சுகம், காரிய தடங்கல், உறவினர் வெறுப்பு.

**விருச்சிகம்**
திடீர்பயணம், ஆபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம், பணவருவாய்.

**தனுசு**
சுகவாழ்வு, சத்துரு ஜெயம், பொருள் சேர்க்கை, பிரயாணம்.

**மகரம்**
காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம், குடும்பகக் கவலை, பெரியோர் சந்திப்பு.

**கும்பம்**
கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், அற்பர் உறவு, தொழிலில் மந்தம்.

**மீனம்**
இனிய அனுபவம், அன்னியர் சந்திப்பு, தொழில் முன்னேற்றம், பிரயாணநன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# யாழ். பல்கலைக்கழக நிதியாளர் ஊழியரின் உரிமைகளை மீறியுள்ளார்

## யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நிதியாளர் ஊழியர்களிடையே பாரபட்சமாக நடந்து கொண்டமை மனித உரிமை மீறலாகும். "பல்கலைக்கழக நிதியாளரின் மனித உரிமை மீறல்கள்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும், எமது பல்கலைக்கழக போதனைசாரா ஊழியருக்கான 2004 ஜனவரி முதல் மே வரையிலான 5 மாதங்களுக்கான நிலுவைக்கொடுப்பனவு (ஒவ்வொரு வருக்கும் ரூபா.5750/= அல்லது ரூபா.5000/=) 14.07.2004 அன்று மக்கள் வங்கியில் பல்கலைக்கழகக் கிளையில உள்ள ஊழியர்களின் கணக்கிற்கு அனுப்பப்பட்டு புத்தகத்தில் வரவு வைக்கப்பட்டது.

ஆனால் 15.7.2004 இன்று நிதியாளர் மக்கள் வங்கிக் கிளைக்குச்சென்று இக்கொடுப்பனவை இடைநிறுத்துமாறு கோரியிருந்தார். இதன்படி சிலருக்கு வழங்கப்பட்ட நிலையில் பிறருக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை. ஊழியர்கணக்கில் வரவு வைக்கப்பட்ட பணத்தை எடுக்க ஊழியர்களை வங்கி அனுமதிக்கவில்லை.

இதன் பின்னர் மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளருடன் எமது சங்கம் தொடர்பு கொண்டதன் பலனாக 15.7.2004 மதியம் 12.00 மணிக்குப் பின்னர் இக்கொடுப்பனவினை தமது கணக்கில் இருந்து எடுக்க வங்கி அனுமதித்தது.

பல்கலைக்கழக நிதியாளர் இவ்வாறான செயலில் ஈடுபட்டமை மனித உரிமை மீறாலாகும் என கருதுகிறோம. ஊழியர் பணிபுரிந்த காலப்பகுதிக்கான (ஜனவரி மே 2004) கொடுப்பனவைத் தகுந்த காரணமின்றி இடைநிறுத்த இவருக்கு அதிகாரம் இல்லை எனக் கருதுகிறோம. மேலும் வங்கியில் கணக்கு வைத்துள்ள ஊழியருக்கு இக்கொடுப்பனவுகள் வங்கிக்கணக்குக்கு அனுப்பப்பட்டது. அதேநேரம் வங்கியில் கணக்கு வைத்திராத ஊழியருக்கு இதை வழங்க பல நிபந்தனைகளை நிதியாளர் விதித்துள்ளார். வங்கியில் கணக்கு வைத்துள்ள ஊழியருக்கு இவ்வாறு எந்த நிபந்தனையும் விதிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(உ-19)

# தரம்–5 புலமைப்பரிசில்
# பயிற்சி வினாத்தாள்

**இல:08** **ஆக்கம்: சுந்தர் வெளியீடு**

♣ பின்வரும் பாடல்களை வாசித்து அதன் கீழ் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

ஏர்பிடித்து வயல் உழுதோம்
அந்தக் காலம்
எந்திரத்தால் வயல் உழுதோம்
இந்தக் காலம்

வண்டி கட்டி சென்று வந்தோம்
அந்தக் காலம்
அண்டைவெளி சென்று வந்தோம்
இந்தக் காலம்

அம்புலியை வா வா என்றோம்
அந்தக் காலம்
அம்புலிக்குச் சென்று வந்தோம்
இந்தக் காலம்

**(01) பின்வரும் சொற்களுக்கு ஒத்தசொல் தருக.**
(i) ஏர் (.....................) (ii) வயல் (.....................)
(iii) அண்டைவெளி (.....................) (ii) அம்புலி (.....................)

**(02) பின்வரும் சொற்களின் எதிர்ச்சொல் தருக.**
(i) வா (.....................) (ii) அந்த (.....................)

**(03) கீழ்வரும் சொற்களின் பொருள்தரும் ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுதுக.**
(i) அம்புலி (.....................) (ii) வண்டி (.....................)

**(04) சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**
(i) அம்புலிக்கு செல்ல உதவிய சாதனம் எது? (.....................................)
(ii) வயலை உழப் பயன்படுத்தும் இயந்திர சாதனம் எது? (...............................)
(iii) வயற்செய்கையில் ஏற்பட்ட மாற்றம் என்ன? (.....................................)
(iv) பாடலில் குறிப்பிட்டதுபோல வேறு ஏதாவது ஒரு மாற்றத்தை அந்தக் காலத்தையும், இந்தக் காலத்தையும் ஒப்பிட்டு எழுதுக.
(.......................................................................................................)
(.......................................................................................................)

**(05) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் குறைபாடு உள்ளது. ஒவ்வொரு வாக்கியத்தையும் நன்கு அவதானமாக வாசித்து குறைபாட்டை நீக்கி சரியான வாக்கியமாக எழுதுக.**
(i) சந்தையில் பழங்கள் வேண்டினேன் (.....................................)
(ii) நாய் குலைத்தது (.....................................)
(iii) பாடசாலைக்கு மாணவர் பலர் சமூகமளிக்கவில்லை
(.......................................................................................................)

**(06) பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக.**
(i) சந்திரனில் முதலில் காலடி எடுத்து வைத்தவர் (...............................)
(ii) பூமிக்கு மிக அண்மையில் உள்ள கோள் (...............................)
(iii) நத்தையின் முட்டையின் நிறம் (...............................)
(iv) உலகப் பொதுமொழி என அழைக்கப்படுவது (...............................)
(v) இலங்கை வாழ் மக்களில் பெரும்பான்மையோர் பேசும்மொழி (...............................)

**(07) கூட்டுக்குள் தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமான இடைவெளியில் எழுதுக.**

எழுதுவாள் படித்தான் எழுதுகிறாள் படிப்பான் எழுதினாள்
படிக்கின்றான் மாம்பழங்கள் கடிதங்கள் மாம்பழம் கடிதம்


| ஒருமை | பன்மை | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

**(08) உமது சூழலில் நடைபெறும் சில தொழிற்பாடுகளை கீழே உள்ள படங்கள் காண்பிக்கின்றன. இப்படங்களால் காட்டப்படுவோர் செய்யும் தொழில்களை எழுதுக.**

(i)  (ii)  (iii)  (iv) 

(..................) (..................) (..................) (..................)

**(09) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**
(i) நுளம்பினால் பரவத்தக்க நோய்
1. வயிற்றோட்டம் 2. மலேரியா 3. நெருப்புக்காய்ச்சல் 4. சின்னமுத்து
(ii) சுவைச்சரக்குப் பயிர்களில் ஒன்று
1. தென்னை 2. மிளகாய் 3. கத்தரி 4. இறப்பர்
(iii) எரிதலின்போது விடுவிக்கப்படுவது
1. ஒட்சிசன் 2. காபனீர் ஒட்சைட் 3. தூசுதுணிக்கை 4. மேற்சொன்ன மூன்றும்
(iv) உருப்பெருக்கிக் கண்ணாடியூடாக அவதானித்த போது




தெரிந்த மண் மாதிரிகள் மூன்றினை அருகே உள்ள படத்தில் காண்கிறீர்கள். இங்கு A,B,C இற்கு பொருத்தமான விடை

| | A | B | C |
|---|---|---|---|
| 1. | மணல்மண் | தோட்டமண் | களிமண் |
| 2. | தோட்டமண் | மணல்மண் | களிமண் |
| 3. | மணல்மண் | களிமண் | தோட்டமண் |
| 4. | களிமண் | மணல்மண் | தோட்டமண் |

(v) வெள்ளை நிறப்பூவையுடைய தாவரம்
1. மல்லிகை 2. முல்லை 3. நித்தியகல்யாணி 4. மேற்சொன்ன மூன்றும்
(vi) புரதச்சத்து உயர்வான கடல் உணவு
1. சோய அவரை 2. முட்டை 3. நெத்தலி 4. மேற்சொன்ன மூன்றும்
(vii) வீட்டுக்கு காவலுக்கு இருப்பது
1. பூட்டு 2. நாய் 3. திறப்பு 4. பூனை
(viii) மனித உடலில் எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் அங்கம்
1. இதயம் 2. கண் 3. வாய் 4. காது
(ix) இலங்கையில் கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வு
1. தேர்தல் 2. கிரிக்கெற் 3. புதுவருடப்பிறப்பு 4. சமாதான ஊர்வலம்
(x) அருகே உள்ளது போன்ற வேரை உடைய தாவரம்



1. நெல் 2. வெங்காயம்
3. குரக்கன் 4. குப்பைமேனி

(xi) "பற்றி" என்பதற்குப் பொருத்தமான விஞ்ஞான பதம்
1. மின் குமிழ் 2. மின் கலம் 3. மின் விசிறி 4. மின் ஆளி
(xii) கற்களின் கீழ் அகப்பட்டு நீண்டகாலம் இருக்கும் தாவரப்பகுதி ஒன்றின் நிறம்
1. கடும்பச்சை 2. இளம்பச்சை 3. மஞ்சள் 4. வெள்ளை
(xiii) வட்டவடிவ முகத்தை உடைய பொருள்
1. பந்து 2. கட்டிப்பாற்பேணி 3. தாயக்கட்டை 4. தீப்பெட்டி
(xiv) நாம் முகம் பார்க்கப்பயன்படுத்தும் கண்ணாடியின் திருத்தமான விஞ்ஞானப் பெயர்
1. குவிவாடி 2. குழிவாடி 3. தளவாடி 4. கண்ணாடி
(xv) ஒரு பொருளை உருப்பெருக்கிக் காட்டும் கண்ணாடியின் விஞ்ஞானப் பெயர்
1. கைவில்லை 2. பூதக்கண்ணாடி 3. தளவாடி 4. கண்ணாடி



**(10) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.**
(i) பூக்கள் நிறமுடையனவாக இருத்தல் பூச்சிகளைக் கவர்வதற்கு உதவும் (...........)
(ii) உண்ணத்தக்க சதைப்பற்றான பகுதியையுடைய பழங்கள் விலங்குகளால் பரம்பலடையும் (...........)
(iii) அரசாங்க வைத்தியசாலைகளில் காசு கொடுப்பதன் மூலம் சிறந்த மருத்துவ சேவையைப் பெறலாம் (...........)
(iv) சுவரொட்டி, புதினப் பத்திரிகை என்பன கண்ணால் தகவலை வழங்கும் சாதனங்களாகும். (...........)
(v) பனிகாலங்களில் தேங்காய் எண்ணெய் திண்மமாக மாறிக் காணப்படும். (...........)

**(11) கீழ்வரும் படத்தின் மூலம் காட்டப்படுபவர்கள் இலங்கையில் வாழும் பல்வேறு மக்கட் கூட்டத்தினர் ஆவர். இவர்களை இனங்கண்டு அவர்கள் இனங்களை எழுதுக.**

(i)  (ii)  (iii)  (iv) 

(..................) (..................) (..................) (..................)


**(12) கீழே காட்டப்பட்டுள்ள உருக்களின் கணிதப் பெயரை எழுதுக.**


(i)  (ii)  (iii) 

(..................) (..................) (..................)

**(13) மேலே வினா (12)இல் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள உருக்கள் தொடர்பாக பின்வரும் அட்டவணையை நிரப்புக.**

| | உரு 1 | உரு 2 | உரு 3 |
|---|---|---|---|
| விளிம்புகள் | | | |
| உச்சிகள் | | | |
| முகங்கள் | | | |

**(14)**  **அருகேயுள்ள உருவில் வட்டத்தின் மேற்புரம் உள்ள சதுரத்தில் X எனவும் கீழ்ப்புறம் உள்ள சதுரத்தில் Y எனவும் எழுதுக.** (..................)

**(15)**  **அருகேயுள்ள உருவில் உள்ள**
(i) முக்கோணிகளின் எண்ணிகை யாது? (..................)
(ii) நான்கு பக்கமுடைய உருக்களின் எண்ணிக்கை யாது?

**(16) மூன்று மாணவர்களின் நிறைகளும் உயரங்களும் வருமாறு**

சுதாகர் 35 Kg 510 cm | பிரபாகரர் 36 Kg 505 cm | கமலன் 34 Kg 420 cm


இவர்களில் நிறைகூடிய மாணவர் பெயரையும், உயரம் கூடிய மாணவர் பெயரையும் எழுதுக.
நிறை கூடிய மாணவன் (..................) உயரம் கூடிய மாணவன் (...............)

(17) ஒரு வானொலிப் பெட்டியின் விலை ரூபா 15,000 ஆகும். அதனை உடன் காசுக்கு வாங்கின் விலை ரூபா 12,000 அல்லது தவணை முறையில் காசுகட்டி வாங்கின் அதன் விலை ரூபா 16,000 ஆகும். இந்த வானொலிப் பெட்டியை உடன்காசுக்கு வாங்குவதால் வாங்குபவருக்கு கிடைக்கும் இலாபம் எவ்வளவு? (.....................)

(18) கமலன், நிமலன் ஆகியோரது நிறைகளின் கூட்டுத்தொகை 65 கிலோ கிராம். கமலன், நிமலன், விமலன் ஆகியோரது நிறைகளின் கூட்டுத்தொகை 97 கிலோகிராம் எனின் விமலின் நிறை என்ன? (..................)

(19) ஒரு பையினுள் 20 சிவப்பு நிற மாபிள்களும் 22 மஞ்சள் நிற மாபிள்களும் உண்டு. ஆனால், பையினுள் பச்சை நிற மாபிள்களின் எண்ணிக்கை சிவப்பு நிறத்திலும் அதிகமாகவும், மஞ்சள் நிறத்திலும் குறைவாகவும் இருந்தது எனின் அதனுள் இருந்த பச்சை நிற மாபிள்களின் எண்ணிக்கை எவ்வளவு? (..................)

♣ **அருகே தரப்படும் உருவை அவதானித்து விடை எழுதுக.**




(20) **AD** யின் நீளம் என்ன? (..................)
(21) முழு உருவின் சுற்றளவு **76cm** எனின் **AED** இன் நீளம் எவ்வளவு? (..................)

(22) 5 லீற்றர் கொள்ளத்தக்க பாத்திரம் ஒன்றில் 3 லீற்றர் 732 மில்லி லீற்றர் மணெணண்ணெய் உண்டு. இப்பாத்திரத்தை முற்றாக நிரப்புவதற்கு இன்னும் எவ்வளவு மண்ணெண்ணெய் தேவை? (..................)

(23) ஒரு புத்தகத்தை வாசிப்பதற்கு வரணுக்கு 1½ மணித்தியாலமும், சாயிக்கு 1¼ மணித்தியாலமும் மஞ்சுவிற்கு 1¾ மணித்தியாலமும் எடுத்தது. இவர்களில் மிக விரைவாக புத்தகத்தை வாசிப்பவர் யார்? (..................)

(24) **"சுத்தம் சுகம் தரும்..." எனும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் அமைந்த 06 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும்.**

(i) (.......................................................................................................)

(ii) (.......................................................................................................)

(iii) (.......................................................................................................)

(iv) (.......................................................................................................)

(v) (.......................................................................................................)

(vi) (.......................................................................................................)

## மக்களவைத் தேர்தலில் தோல்வியுற்ற 3 அ.தி.மு.க வினருக்கு மாநிலங்களவைப் பதவி

இம் மாதம் 28 ஆம் திகதி நடைபெற இருக்கும் மாநிலங்களவைத் தேர்தலுக்கான அ.தி.மு.க வேட்பாளர் பட்டியலை அக்கட்சியின் பொதுச் செயலாளரும் தமிழக முதலமைச்சருமான ஜெயலலிதா வெளியிட்டுள்ளார்.

மக்களவையின் முன்னால் உறுப்பினர்களான டி.வி.வி தினகரன் ,ரி.மலைசாமி ஆகியோரும் நாமக்கல் மாவட்ட அ.தி.மு.க செயலாளரும் முன்னால் சட்ட மன்ற உறுப்பினரான எஸ்.அன்பழகனும், ஈரோடுமாவட்டம் அம்மாப்பேட்டை ஒன்றியச் செயலாளர் என்.ஆர். கோவிந்த ராஜனும் தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களால் நாடாளுமன்ற மாநிலங்களவையின் ஆறு உறுப்பினர்களைத்தேர் தெடுப்பதற்காக நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடும் அ.தி.மு.க வேட்பாளர்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

பெரிய குளம் மக்களவைத் தொகுதியில் டி.வி.வி தினகரனும், கோபி செட்டிப்பாளயம் மக்களவைத் தொகுதியில் என்.ஆர் கோபிந்தராஜனும் ,இராசிபுரம் மக்களவைத் தொகுதியில் எஸ்.அன்பழகனும் சென்ற மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிவாய்ப்பை இழந்தவர்கள்.

கே.மலைசாமி மாநில அரசில் உட்துறைச் செயலாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற ஐ.எ.எஸ். அதிகாரியாவார். (து)

## ‘ஆயுதம்’படப்பிடிப்பில் தீ விபத்து

## நடிகர் பிரசாந்த் - நடிகை சினேகா மயிரிழையில் உயிர் தப்பினர்

(சென்னை)

தீ விபத்திலிருந்து நடிகர் பிரசாந்த்-நடிகை சினேகா ஆகியோர் மயிரிழையில் உயிர்தப்பினர்.



பிரசாந்த்-சினேகா நடிக்கும் ‘ஆயுதம்’படத்தின் படப்பிடிப்பு நேற்று முன்தினம் சென்னை வண்ணாரப்பேட்டையில் நடைபெற்றது. படத்தில் காட்சிப்படி நடிகர் பிரசாந்தும் சினேகாவும் கயிறுகட்டி தொங்க விடப்பட்டனர்.

கீழே வாயு வெல்டிங் மூலம் தீப்பொறிகள் பறப்பது போலவும் சண்டைக்காட்சி ஒன்றை படமாக்கத் திட்டமிட்டு இருந்தனர்.

அந்த நேரத்தில் தீப்பொறி அதிகமாகப் படப்பிடிப்புக் குழுவினரிடையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதில் சண்டைப் பயிற்சியாளர் கனல் கண்ணணும் அவரது சகாக்களும் மிகவும் சாமர்த்தியமாக பெரிய தீ விபத்து ஏற்படாமல் வாயுக் கொள்கலன்களை உடனே அங்கே இருந்து அப்புறப்படுத்தினர்.

உயிரைப்பற்றிக் கவலைப்படாமல் சண்டைப் பயிற்சியாளர்கள் நடிகர் பிரசாந்தையும் சினேகாவையும் காப்பாற்றி விட்டனர். ஒரு வேளை வாயுக கொள்கலன் தீப்பொறியால் வெடித்திருந்தால் பிரசாத்-சினேகா இருவரும் கேள்விக்குறியாகியிருப்பார்கள்.இந்தச் சம்பவத்தினால் படப்பிடிப்புக் குழுவினர்கள் பெரும் அதிர்ச்சியில் இருந்து மீள முடியாமல் தவிர்த்தனர்.தீவிபத்தச் சம்பவத்தை தொடர்ந்து படப் பிடிப்பு ரத்துச் செய்யப்பட்டது.

சினேகா உயிர் தப்பினால் போதும் என்று படப்பிடிப்பில் இருந்து வீட்டுக்குக் கிளம்பிச் சென்றுவிட்டார். (து)

# வாஜ்பாய் கருத்துக்கு வெங்கைய நாயுடு எதிர்ப்பு

(புதுடில்லி)

மும்பையில் வரும் 23,24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள பா.ஜ.க.வின் தேசியசெயற் குழுக் கூட்டத்தில் குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடியை மாற்றுவது பற்றிய விவாதம் நடை பெறாது என்று பா.ஜ. கட்சியின் அகில இந்தியத் தலைவர் வெங்கைய நாயுடு திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

நேற்றுமுன்தினம் புதுடில்லியில் செய்தியாளரிடம் பேசுகையில் மகராஷ்ட்ரம் ,பீகார்,ஜார்க்கண்ட், ,ஹரியான ,அருணாசலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சட்டப் பேரவைக்கு நடைபெறவிருக்கும் தேர்தலுக்கான யுத்திகளை வகுப்பது தான் பா.ஜ.க செயற்குழுக் கூட்டத்தின் நோக்கம் என்று அவர் தெரிவித்தார்.

வாஜ்பாயுடன் தான்தொலைபோசியில் தொடர்புகொண்டு கேட்டபோது நரேந்திரமோடி சம்பந்தமாக தான் வெளியிட்டதாக வெளிவந்த செய்திகளை அவர் மறுத்ததாக வெங்கைய நாயுடு கூறினார்.

உத்தரப்பிரதேச அரசு மீது அரசியல் சாசனத்திற்குப் புறம்பாக மத்திய அரசு நடவடிக்கை எடுக்குமானால் அதுகுறித்து பா.ஜ.க கடுமையான ஆட்சேபம் தெரிவிக்கும் என்றும் அவர் கூறினார். இதனிடையே நரேந்திர மோடி பற்றியும் குஜராத் சம்பவங்கள் குறித்தும் வாஜ்பாய் தெரிவித்த கருத்துக்கு R.S.S ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

குஜராத் வன்முறைச்சம்பவங்கள் குறித்தும் நரேந்திர மோடி நீக்கம் பற்றியும் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்த கருத்துக்கள் குழப்பமாக இருந்தாலும் வரவேற்கத்தக்கது என்று காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது.

வாஜ்பாய் தெரிவித்த கருத்துக்கு பா.ஜ.க தலைவர் வெங்கைய நாயுடுவும் சங்பரிவார் அமைப்புகளும் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதில் இருந்து வாஜ்பாய்க்கு எதிராக பகிரங்கப் போர் தொடுக்கப்பட்டிருப்பது அம்பலமாகி விட்டது.என்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் சதுாவேதி புதுடில்லியில் கூறினார்.

நரேந்திரமோடி பிரச்சினைக்கு வாஜ்பாய் அறிக்கை மூலம் தீர்வு கண்டுவிடமுடியாது. என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பரதன் கூறியிருக்கிறார்.

வாஜ்பாயும் வெங்கைய நாயுடுவும் முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவிப்பதால் பா.ஜ.க பலவீனம் அடைந்து விட்டதாக கருதுவது மிகப் பெரியதவறு; அதற்கு எதிரான போராட்டம் தொடர்ந்து நடக்க வேண்டும் என்றார்அவர். (து)

## இந்தியச் செய்திகள்

## சென்னையில் 4 புதிய மேம்பாலங்கள்

(சென்னை)

சென்னையில் 4 முக்கிய இடங்களில் தேசிய நெடுஞ்சாலைகள் மீது சுமார் 200கோடி ரூபா செலவில் 4 மேம்பாலங்களைக்கட்ட உத்தேசிக்கபபட்டுள்ளதாக மத்திய கப்பல், தரைவழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ரி.ஆர் .பாலு தெரிவித்திருக்கிறார்.

சென்னையில் விமான நிலையம்,கத்திபாரா சந்திப்பு, கோயாமேடு மற்றும் பாரி ஆகிய 4 இடங்களில் மேம்பாலங்கள் அமைக்கப்படவுள்ள பகுதிகளை நேற்று முன்தினம் அவர் பார்வையிட்டார்.

பின்னர்செய்தியாளரிடம் பேசிய ரி.ஆர் பாலு இப்பாலங்களின் கட்டுமானப்பணிகள் இன்னும் ஆறு மாதங்களில் துவங்கும் என்றார்.

பாரி பகுதியில் அமைக்கப்படும் மேம்பாலம் தமிழக அரசு, சென்னை மாநகராட்சி மற்றும் ரயில்வே ஆகிய வற்றின் ஒத்துழைப்புடனும் கோயாமேடு மேம்பாலம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமும் அமைக்கப்படும் என்றார். (து)

## காவிரி நீர்ப் பிரச்சினை பற்றிய நிபுணர் குழு அறிக்கை பரிசீலனை

(சென்னை)

காவிரி நீர்ப் பிரச்சினையில் நிபுணர் குழு அளித்த அறிக்கை மீது நடவடிக்கை எடுப்பது பற்றி மத்திய நீர் வளத் துறை அதிகாரிகள் புதுடில்லியில் ஆலோசனை நடத்தினார்கள்.

தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரைச் சந்தித்து காவிரியில் உடனடியாகத் தண்ணீர் திறந்து விடக் கேட்டுக் கொண்டதையடுத்து மத்திய அரசு நிபுணர்கள் குழு தமிழக, கர்நாடக அணைகளைப் பார்வையிட்டது.

இந்தக் குழுவின் அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமையன்று அரசுக்கு அளிக்கப்பட்டது.

இந்தஅறிக்கை மீது நடவடிக்கை எடுப்பது பற்றிச் நீர்வளத்துறை செயலர் தலைமையில் உயர் அதிகாரிகள் குழு ஆலோசனை நடத்துகிறது. (து)



டெல்லியில் உள்ள சீக்கிய வழிபாட்டுத்தலமான குருத் வாராவுக்கு சென்று சனிக்கிழமை சென்று வழிபட்டார் பிரதமர் மன்மோகன் சிங். அங்கு மன்மோகன் சிங்கிற்கு சால்வை மற்றும் உடைவாள் அளித்து வாழ்த்துகிறார் சீக்கிய மதகுரு பாபா ஹர்பன்ஸ் சிங்.

### கர்நாடகம் செல்லும் தமிழக அரசு குழு

(பெங்களூர்)

தமிழ் நாட்டுக்குத் தண்ணீர் திறந்து விடும்படி நேரில் கோருவதற்காக தமிழக அரசு சார்பில் குழு வொன்று பெங்களூர் செல்லவிருக்கிறது. இந்தத் தகவலை கர்நாடக சட்டமன்றத்தில் கர்நாடக முதல் அமைச்சர் தரன் சிங் தெரிவித்தார்.

வரும் 16,17 திகதிகளில் இக் குழு பெங்களூர் வரும் என்று தமிழக முதல் அமைச்சர் ஜெயலலித தமக்கு கடிதம் எழுதியிருப்பதாக அவர் கூறினார்.

கர்நாடக விவசாயிகளின் நலனுக்கெதிராகத் தமதுஅரசு ஒரு போதும் செயற்படாது என்றும் பெங்களூரில் நடைபெறும் அனைனத்துக் கட்சிக் கூட்டத்தில் இது பற்றி விரிவாக விவதிக்கப்படும் என்றும் கர்நாடக முதலமைச்சர் சட்ட மன்றக்தில் கூறினார். (து)





உலக குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு தினத்தையொட்டி பெங்களூரில் நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டபேரணி நடைபெற்றது. இதில் குழந்தைத் தொழிலாளர்களின் நிலைகள் குறித்து விளக்கப் பட்டது. பேரணியில் பள்ளிச் சிறுவர்களை வழி நடத்திச்செல்லும் உடல் ஊனமுற்ற சிறுவன்.

## நீதிமன்றின் காலவரம்பை 2 நாள் நீடிக்க வை.கோ.மனு

(சென்னை)

அமெரிக்காவிலிருந்து திரும்புவதற்குத் தமக்கு நீதி மன்றம் விடுத்துள்ள கால வரம்பை இன்னும் இரண்டு நாட்கள் நீடிக்க வேண்டுமென்று ம.தி.மு.க பொதுச் செயலரளர் வை.கோ சென்னை உயர் நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்திருக்கிறார்.

பொடா சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டு பிணையில் வெளிவந்துள்ள அவர் சென்னை உயர் நீதிமன்ற அனுமதியின் பேரில் அமெரிக்கா சென்றுள்ளார்.

இம்மாதம் 20 ஆம் திகதி அவர் திரும்ப வேண்டும் மென்று நீதிமன்றம் நிபந்தனை விதித்தது.

தற்போது அமெரிக்காவிலிருக்கும் வை.கோ.,தான் திரும்புவதற்கு 20 ஆம் தேதி தான் விமானத்தில் இருக்கை கிடைத்துள்ளது என்றும் இதனால் 22 ஆம் தேதி தான் சென்னை திரும்ப முடியும் என்றும், எனவே இரண்டு நாள் அனுமதியை நீடிக்க வேண்டும் என்றும் அந்த மனுவில் கேட்டுக் கொண்டிருக்கிறார். (து)

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழி பயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல் - குறள்

வலம்புரி

# திட்டமிடப்படாத வேலைத் திட்டங்கள்

வடபகுதி யுத்தத்தால் அழிந்து போய் மீள்புன ரமைப்புக்காகக் காத்திருக்கின்றது. இடம் பெயர்ந்த மக்கள் மீளவும் குடியிருப்பதற்கு வீட்டுவசதிக ளுமின்றி பெரும் துன்பங்களை அனுபவித்துவரு கின்றனர்.

இதேவேளை மீளக்குடியமர்ந்த இடங்களில் அடிப்படைத் தேவைகளான மலகூடம், குடிநீர், மருத்தும், போக்குவரத்துப் போன்ற வசதிகள் இன்றி மக்கள் ஆதிகால வாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் எத்தனையோ சர்வதேச அமைப்புக்கள் இயங்குகின்றபோதிலும் அவற்றின் பணிகள் திருப்தி தருவதாக இல்லை.

கோடிக்கணக்கான நிதி யாழ்.மாவட்டத்தில் செலவிடப்பட்டதாக அவ் அமைப்புகளின் வருடாந்த கணக்காய்வறிக்கைப் புள்ளிவிபரங்கள் தெரி விக்கின்ற போதிலும், அதன் பயன்பாடு என்ன வெனில் முடிபு வாயில் கைவைக்கும் நிலையா கவே உள்ளது.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் இயங்குகின்ற நிறுவனங்கள் தமது நிர்வாகச் செலவாக பெரு மளவு நிதியை உள்வாங்கிவிடுகின்றது.

மிகுதியான நிதியானது மக்களின் தேவைகளை மையமாக வைத்துச் செலவிடப்படாமல், குறித்த சர்வதேசப் பொது அமைப்பின் கொள்கைக்கும் அந்த அமைப்பை பிரதிநிதித்துவம் செய்கின்ற தலைமையகங்களின் தீர்மானங்களுக்கமைவாக வும் மேற்கொள்ளப்படுகின்றது.

இதனால் மக்களின் தேவை ஒன்றாகவும், நிதிப் பயன்பாடு வேறொன்றாகவும் இருக்கின்றது. இதன் காரணமாக பொது மக்கள், பொது அமைப்புக் களின் வேலைத் திட்டங்களில் ஆர்வம் காட் டாமல் ஏனோதானோ என்ற போக்கில் இருக் கின்றனர். மக்களைத் தேடிச் செல்லுங்கள், அவர்களுக்கு அன்பு செலுத்துங்கள் அவர்க ளோடு சேர்ந்து திட்டமிடுங்கள் அவர்களுக்காகப் பணியாற்றுங்கள்...

எனப் பொதுச் சேவையின் வெற்றிக்குப் பாதை காட்டிய ஜேம்ஸ் ஜென் என்ற அறிஞனின் கூற்றை யாழ்ப்பாணத்தில் உள்ள எந்த அமைப்புக்களுமோ கடைப்பிடிக்கவில்லை.

இதன் காரணமாகப் பொது அமைப்புக்களின் சேவையொன்றாகவும், மக்களின் தேவை இன் னொன்றாகவும் இருக்க, இரு தரப்பிற்குமான இடை வெளி குறுக்கமின்றி விரிந்து செல்கின்றது.

இதற்கு மேலாக பொது அமைப்புக்களினால் வழங்கப்படுகின்ற சேவைகள் பூரணமின்றியும், தரமின்றியும் இருப்பதால் அது விடயத்தில் மக்கள் வெறுப்பும், சலிப்பும் அடைகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் இயங்குகின்ற சர்வதேச பொது அமைப்புக்கள் இடம் பெயர்ந்தோரை-நலனோம்பு முகாம்களில் வாழ்கின்றவர்களை-மீளக்குடியமர்ந்த மக்களை நோக்குகின்ற பார்வை வித்தியாசமானதாகவே உள்ளது.

சோமாலியாவைப் போல், எதியோப்பியாவைப் போல் இவர்களும் என்ற பார்வையின் காரணமாகவே அந்த அமைப்புக்களினால் வழங்கப்படுகின்ற உதவிகள் தற்காலிகமானதாகவும், தரமற்றதாக வும் இருக்கின்றன. வட பகுதி மக்களைப் பொறுத்த வரை அவர்கள் யுத்தத்திற்கு முன்னர் இந்த மண்ணில் தங்களின் சொந்தக் காலில் நின்றவர் கள், மண்ணையும், கடலையும் தங்களின் தொழில் வளங்களாகக் கண்ட முயற்சியாளர்கள். வெளிநாட்டினதோ அன்றி உள்நாட்டினதோ நிவா ரணங்களுக்காக அவர்கள் கையேந்தியது கிடை யாது.

சொந்த மண்ணில் சுகபோகமாக வாழ்ந்தவர் கள், இனவாத அரசுகளின் கொடூரத்தால் இவர் கள் ஏதிலிகளாக்கப்பட்டவர்கள். இப்போது அவர் களின் ஏதுமற்ற நிலை வெளிநாட்டவர்களின் ஏளனப் பார்வைக்கும் காரணமாக இருக்கலாம். இதனால், வீடுகளை அமைக்கும் போது பொருத்த மற்ற விடுகளைப் பொது நிறுவனங்கள் அமைத்துக் கொடுப்பதைக் காண முடிகிறது. இத்தகைய பொருத்த மற்ற வீடுகள் மற்றும் பொருத்தமற்ற திட்டங்கள் பொது அமைப்புக்களின் சேவைக ளில் இருந்து மக்களை அன்னியப்படுத்திவிடும் என்பதால் மக்களின் தேவை கருதிய திட்டங் களைத் தீட்டுவதற்கும் அதனை நடைமுறைப் படுத்துவதற்கும் பொது அமைப்புக்கள் முன்வர வேண்டும்.

# ஜனாதிபதியின் முரண்பாடான நிலைப்பாடு குறித்து நெதர்லாந்துக் குழுவுக்குக் கூட்டமைப்பு விளக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேச்சுவார்த்தைக்கான அடிப்படை விடயங்களில் தீர்க்கமான முடிவினை எடுக்காது, முரண்பாடான நிலையினைக் கடைப்பிடித்தால் சமாதானப் பேச்சுவார்த்தையினை மீண்டும் ஆரம்பிப்பதென்பது கடின மான விடயமாக அமைந்துவிடும் என்று தமிழ் தேசியக் கூட்ட மைப்பினர் நெதர்லாந்து தூதுக்குழுவினரிடம் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள நெதர்லாந்து நாட்டின் அரசாங்க தூதுக் குழுவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்றுமுன்தினம் காலை சந்தித்து விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தினர். கொழும்பிலுள்ள நெதர்லாந்துத் தூதரகத்தில் நடை பெற்ற இச்சந்திப்பில் அந்நாட்டின் அரசாங்கப் பிரதிநிதிகளான ஜெசிலலா கொவ்லண்ட், ரிஜேஜே வால்டிஜ்க் ஆகியோரையே கூட்டமைப்பினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சமாதான முயற்சியின் நிலைப்பாடு, தற்போதைய அரசி யல் சூழ்நிலை, இடைக்கால நிர்வாகசபை என்பன குறித்தும் கூட்டமைப்பினிடம் நெதர்லாந்துக் குழுவினர் கேட்டறிந்து கொண்டனர். சமாதானப் பேச்சுவார்த்தையினை மீள ஆரம்பிப பது தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு எமக்கு சந்தேகமளிப்பதாகவுள்ளது. கடந்த வாரம் எம்மை சந்தித்து பேசிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து பேச்சு நடத்தி அதற்கான ஒப்பந்தத்தினை மேற்கொண்டு நடை முறைப்படுத்திய பின்னரே இறுதித் தீர்வு குறித்துப் பேசத் தயார் என்று தெரிவித்திருந்தார்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்துப் பேச்சு நடத்தி அதற்கான ஒப்பந்தத்தினை மேற்கொண்டு நடை முறைப்படுத்திய பின்னரே இறுதித் தீர்வு குறித்துப் பேசத்தயார் என்று தெரிவித்திருந்தார். விடுதலைப் புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையினைக் கோருவதனால் தமது நிலைப் பாட்டினை மாற்றியுள்ளதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் இவ்விடயம் குறித்து ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில், முரண்பாடான நிலை காணப்படுகிறது. இத் தகைய முரண்பாடு சமாதான முயற்சிக்குப் பாதகமாகவே அமையும். எம்மிடம் இடைக் கால நிர்வாக சபை குறித்து முதலில் பேச தயார் என ஜனாதிபதி தெரிவித்த அதேவேளையில், ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் இறுதித் தீர்வுக்கான பேச்சுவார்த்தையின் போது இடைக்கால நிர்வாக சபைகுறித்த பேச்சுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் இத்தகைய முன்னுக்குப் பின் முரணான நிலைப்பாடு சமாதானப் பேச் சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு உதவப்போவதில்லை என்றும் கூட்டமைப்பினர் விளக்கிக் கூறியுள்ளனர்.

வட - கிழக்கில் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வழங்கப்படுவது அவசியமாகும். யுத்தத்தால் பாதிப்புக்குள் ளான வட - கிழக்கைப் புனரமைக்க உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பதையும் கூட்டமைப்பினர் விரிவாக எடுத்து விளக்கியுள்ளனர். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர் வரும் மாகாண சபைத் தேர்தலுக்காகவோ ஜே.வி.பியை சமாளிப்பதற்காகவோ, இத்தகைய முரண்பட்ட கருத்துக்களை தெரிவிப்பதாக சந்தேகமெழுகின்றது எனவும் இச் சந்திப்பில கூட்டமைப்பினர் எடுத்துக் கூறியுள்ளனர்.

இச் சந்திப்பில் கூட்டமைப்பின் எம்.பிக்களான ஜோசப் பரராஜசிங்கம், சுரேஸ பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன் னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டனர். இலங்கையின் நிலை வரம் குறித்து அறிந்து வரும் நெதர்லாந்துக் குழுவினர் தமது அரசாங்கத்துக்குத் தற்போதைய நிலை குறித்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (உ)

## தனியார் கல்வி நிலையங்களின் சுகாதார நிலை குறித்துக் கவனம்

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலை யங்களில் கல்வி கற்கின்ற மாணவர்களிற்கு அடிப்படைச் சுகாதார வசதிகளைச் செய்து கொடுப்பதன் முக்கியத் துவம் தொடர்பாக பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் சகல பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் சுகா தார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி களிற்கும் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் பல தனியார் கல்வி நிலை யங்களில் மாணவர்கள் சனி ,ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் விடுமுறை தினங்களில் பல மணித்தியாலங்கள் கல்வி கற்கின்றனர்.

அததுடன், பகல் நேர வகுப்புகளிலும் பல மாணவர்கள் கல்வி கற்கும் நிலையும் உள்ளதால் இவ் விடயத்தில் தனியார் கல்வி நிலைய நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுப்பது மிகவும அவசியம் எனவும் தெரிவிக்கப்படுள்ளது.

மேலும் ஒவ்வொர் கல்வி நிலையத்திலும் பாதுகாப்பான குடிநீர் சுத்தமான பெரிய கொள்கலத்தில் பேணப்பட வேண் டும் எனவும் சுகாதாரமான மலசலகூட வசதிகள் மற்றும் கல்வி கற்கும் இடம் காற்றோட்டம், வெளிச்சம் நிறைந்ததாகவும் சுற்றாடல் துப்புரவாக இருப்பதையும் அவ்வவ் பகுதி பொதுச்சுகாதா ரப் பரிசோதகர்கள் கண்காணிப்பது அவசியம் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (உ-25)

## கலாசாரத்தைப் பாதிக்கும் திரைப்படங்களுக்குத் தடை

(கொழும்பு)

கலாசாரத்தைப் பாதிக்கும் மோசமான திரைப்படங்களைத தடைசெய்யப் போவதாக ஜே.வி.பியின் நாடாளு மன்ற உறுப்பினரும், கலாசார அமைச்சருமான விஜிதஹேரத் தொ வித்துள்ளார்.

இதன்படி, சமூகத்தைச் சீரழிக்கும் வகையில் திரைப் படங்கள் திரையிடப்படுவதையும், திரைப்படக் கொட்டகைக ளின் முன்னால் ஆபாச விளம்பரங்கள் வைக்கப்படுவதையும், கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கலாசார அமைச்சர் விஜிதஹேரத் சம்பந்தப்பட்ட அதி காரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, வெளிநாடுகளில் இருந்து திரைப்படங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் கடுமையான கட்டுப்பாடு களைக் கடைப்பிடிப்பதெனவும், முன்னுரிமை அடிப்படையில் உள்ளூர்த் திரைப்படக் கலையின் வளர்ச்சிக்கு உதவுவதற் கும் அமைச்சர் முடிவு செய்துள்ளதாகவும் கலாசார அமைச் சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விஜித ஹேரத்தின் சமீபத்திய அதிரடி நட வடிக்கை காரணமாகக் கொழும்பு கதிரேசன் வீதியில் இயங்கி வந்த பல பாலியல் திரைப்பட மினி சினிமாக் கொட்டகைகளும், வபச்சார விடுதிகளும், போதைப் பொருள் விற்பனை நிலையங் களும் முழுமையாக அகற்றப்பட்டுள்ளமை தெரிந்ததே.(உ)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

உங்களுடைய நரம்புகளுக்கு முறுக் கேற்றுங்கள். நமக்குத் தேவை இரும்பு போன்ற தசைகளும் எஃகுவைப் போன்ற நரம்புகளும் தாம். சுயவலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்.

சுவாமி விவேகானந்தர்.

## பரிசுத்தின விழா

(கோப்பாய்)

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசுத்தின விழா எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி எஸ்கனகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க. சுரேஸ் பிரேமச்சந்திரனும், சிறப்பு விருந்தினர்களாகக் கோப்பாய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி. சிவஞானசுந்தரம் நிக்கொட் நிறுவன அதிகாரி எஸ். கெங்காதரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ள னர். (உ-79)

## பொலிஸ் பாதுகாப்பு மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவினரால் குறைக்கப்பட்டி ருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பொலிஸ் மெய்ப் பாதுகாவலாகளின் எண்ணிக்கை மீளவும் அதிகாிக்கப்பட்டுள் ளது.

கடந்த வாரம் ஜனாதிபதியால் அமைச்சரவைப் பாது காப்புப் பிரிவினருக்கு வழங்கப்பட்ட பணிப்புரையின் கார ணமாக, இதுவரை காலமும் நான்கு பொலிஸ் மெய்ப் பாதுகா வலாகளுடன் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மெய்ப்பாதுகாவலாகளின் எண்ணிக்கை இரண்டாகக் குறைக் கப்பட்டிருந்தது.

இதேவேளைதற்போது வழங்கப்பட்டுள்ள இப்புதிய உத்தர வின் பேரில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திஸாநாயக்க, ஜி.எல்.பீரிஸ், ரவூப் ஹக்கீம், ஆறுமு கன் தொண்டமான் மற்றும் ராஜித சேனாரட்ண ஆகியோருக்கு முன்னரைப் போலவே ஒருவருக்குத் தலா 4 மெய்ப் பாதுகாவ லர்கள் வழங்கப்பட்டுள்ளனர். (உ)

## தேசியப் பாடசாலைகளின் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டம்

(கொழும்பு)

நாட்டின் சகல பிரதேசங்களிலும் உள்ள தேசிய பாட சாலைகளின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் திட்டம் ஒன்றை கல்வி அமைச்சு ஆரம்பித்துள்ளது.

நாட்டில் 324 தேசியப் பாடசாலைகள் இருக்கின்ற போதும குறிபபட்ட 50 பாடசாலைகளிலேயே பெற்றோர்கள் தமது பிள் ளைகளை அனுமதிக்க விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய பாடசாலைகளில் பௌதீக ஆளணி வளங்களுக் குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றதாகவும் இதனாலேயே இங்கு மாணவர்களை சேர்ப்பதற்குப் பெற்றோர் பின் நிற்பதாக வும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் தமது பாடசாலைகளை எவ்வாறு சிறப் பானதாக மாற்றுவது என்பதை விளக்கும் கருத்தரங்குகளை நடத்தி தேசியப் பாடசாலை அதிபர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டம் ஒன்றை கல்வி அமைச்சு ஆரம்பிதுள்ளது.

அத்துடன், கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகளுக்கான பிரிவு அடுத்த மாதம் முதல் சகல தேசியப் பாடசாலைகளை யும் கண்காணிக்கத் தொடங்கும்.

இந்தத் திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல் வதற்காக விசேட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. (உ-60,10)

# மீள்குடியமர்வுக் கொடுப்பனவை 76,650 குடும்பங்கள் பெற்றன

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் 835 மில்லியன் ரூபா நிதியினை வழங்கியுள்ளது.

இதற்கான உடன்படிக்கை, நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் அலுவலகததில் வைத்து நேற்றுக் காலை கைச்சாத்திடப்பட்டது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி வூல்ட்டர் வில்டனும் புனர்வாழ்வு நல்லிணக்கச் அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்காவும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். இந் நிகழ்வில் கலந்து கொண்ட புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் ஏ.எம். குணசிங்க ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த இரு தசாப்தகாலமாக இடம்பெற்ற போரில் 2இலட்சத்து 27 ஆயிரம் குடும்பங்கள் தமது சொந்த இடங்களைவிட்டு வெளியேறியிருந்தன.

இவர்களில் ஒரு இலட்சம் குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குத் தற்போது திரும்பியுள்ளன. அவ்வாறு மீளக்குடியமர்ந்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா உடனடி நிவாரணமாகக் கொடுத்து வருகின்றோம்.

இதுவரை 76,650 குடும்பங்களுக்கு இத்தகைய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-61,10)

# தகவல் தொழில்நுட்பப் பாடம் பின்னடைவை எதிர் கொண்டுள்ளது

## ஆய்வு மூலம் கண்டறிவு

(கொழும்பு)

பாடசாலைகளில் தகவல் தொழில் நுட்பப் பாடத்தைப் போதிக்கும் நடைமுறை பெரும் பின்னடைவை எதிர்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் குழுவொன்று நடத்திய ஆய்வின போதே இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

போதிய கணனி உபகரணங்களும் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களும் இல்லாததன் காரணத்தினாலேயே தகவல் தொழில் நுட்பத்தைப் போதிக்கும் நடைமுறை பெரும் பின்னடைவைக் கண்டுள்ளதாக அந்த ஆய்வாள்ர்கள், கூறியுள்ளனர்.

அத்துடன் பாடசாலை பாடவிதானத்தில் தகவல் தொழில் நுட்பப் பாடத்தை இணைத்துக் கொள்ள கல்வி அமைச்சு திட்டமிட்டிருக்கும் அதேசமயம் அந்தப் பாடத்தை விரிவாகப் போதிக்கக் கூடிய பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களையும் நியமிக்க வேண்டுமென அது தொடர்பான ஆய்வை மேற்கொண்ட குழுவினர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர்.(உ-60,10)

# தமிழகம்- இலங்கைக்கு இடையே கடல்வழித் தரைப் பாதை இருந்தது

## நெதர்லாந்து விஞ்ஞானி தகவல்

(புதுடில்லி)

தற்போது கடலில் மூழ்கியுள்ள தமிழகம்-இலங்கைக்கிடையிலான தரைவழிப் பாதையை மேலே உயர்த்தி தரைவழிப் போக்குவரத்துப் பாதையை ஏற்படுத்தலாமென நெதர்லாந்தில் உள்ள உட்ரேச்ட் பல்கலைக் கழக விஞ்ஞானி ஆர்.டி.ஷில்லிங் தெரிவித்துள்ளார்.

தமிழகத்திற்கும் இலங்கைக்குமிடையில் மூழ்கிக் கிடக்கும் தரைவழிப பாதை தொடர்பாக 'தற்கால விஞ்ஞானம்' என்ற சஞ்சிகையிலேயே அந்த விஞ்ஞானி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தப் பாதை தொடர்பாக அச்சஞ்சிகையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

பல ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் அனுப்பிய விண்கலமே இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான பாக் ஜலசந்தியைப் படம் பிடித்து அனுப்பியிருந்தது இதுவே இன்று கடலில் மூழ்கியுள்ள சுண்ணாம்புக் கற்களினாலான ஆதாம் பாலமென்று கருதப்படுகின்றது.

இயற்கையாக சுண்ணாம்புக் கற்களினால் உருவாக்கப்பட்ட இப்பாலத்தை புவியியல் இரசாயன முறையினைப் பயன்படுத்தி கடல் மட்டத்திற்கு மேலே கொண்டு வரலாமென்று தெரிவித்துள்ள விஞ்ஞானி ஆர்.டி.ஷில்லிங் அமெரிக்கா நாசாவின் கலம் படம் பிடித்தனுப்பிய பாலம் புராணங்களின்படி இலங்கைக்கு இராமரின் வானரப் படைகள் போட்ட பாலமாக இருக்கலாமென்றும் கூறியுள்ளார். (ம)

# கலைப் பீட மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக கலைப் பீட முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் திட்டமிட்டபடி எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இடம் பெறுமென பதிவாளர் அறிவித்துள்ளார். (உ)

# விபத்தில் காயம்

(சாவகச்சேரி)

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த லான்மாஸ்டருடன் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்று பி.ப.3.30 மணியளவில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அண்மையில் நடைபெற்றது. இச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த மீசாலை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த கந்தையா தங்கராசா (வயது61) என்பவரே படுகாயமடைதவராவார் இவர் சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த்-29)

# காலாவதியான உணவுப் பொருட்கள் மீட்டழிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினர் அச்சுவேலி, புத்தூர் பகுதிகளில் உள்ள உணவுச் சாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் நேற்று முன்தினம் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது மீடகப்பட்ட காலாவதியான பொருட்கள் நேற்று அரியாலைப் பகுதியில் பகிரங்கமாக எரியூட்டப்பட்டன.

அச்சுவேலி மற்றும் புத்தூர்ப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான எஸ்.ராஜேந்திரன், எஸ்.தயாளன் ஆகியோரின் அனுசரணையோடு மேற்கொள்ளப்பட்ட மேற்படி திடீர் பரிசோதனையின் போது மீட்கப்பட்ட 60 ஆயிரம் ரூபா பெறுமதியான காலாவதியான குழந்தைகளுக்கான பால்மா வகைகள், பிஸ்கட், பொதி செய்யப்படட அரிசிமா, கன்டோஸ், கடலை என பனவே இவ்வாறு எரியூட்டப்பட்டன. (உ)

# சங்கீத, சித்திர ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களிலும் சங்கீதம், சித்திரம் ஆகிய பாடங்களை க.பொ.த சாதாரணதர மற்றும் உயர் தர மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயல் அமர்வு எதிர்வரும் 19,20ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களை இக்கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாண ஆசிரியர் நிலையத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த சங்கீத பாட ஆசிரியர்களுக்கான செயல் அமர்வு நடைபெற மாட்டாதென கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(த)

# உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நினைவாக நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் கலைவாணி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வடமராட்சி சில்வஸ்ரார் விளையாட்டுக் கழகமும், பி.ப.4.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து வடமராட்சி கண்ணகி அணியும் மோதவுள்ளன.(த)

# முன்பள்ளி ஆசிரியருக்கு

(தனங்கிளப்பு)

கோபபாய்க் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பி.ப.3மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள கல்விக் கண்காட்சி தொடர்பாகவே கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது.(த-37)

## எஸ்.பி.திஸநாயக்காவின்

# அவதூறு வார்த்தைகள் நீதிமன்றில் ஒலித்தன

(கொழும்பு)

முன்னாள் கமத்தொழில் கால்நடை அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திஸநாயக்கா நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் தெரிவித்தாகக் கூறப்படும் கருத்துக்கள் அடங்கிய ஒலிநாடா நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றில் ஒலிபரப்பப்பட்டது.

பிரதிவாதிகள் விடுத்த வேண்டுகோளை ஏற்று ஒலிநாடாவை ஒலிபரப்ப பிரதம நீதியரசர் சரத் என். சில்வா அனுமதி அளித்ததைத் தொடர்ந்தே ஒலிநாடா ஒலிபரப்பப்பட்டது. இதேவேளை முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவுக்கு எதிரான குற்றப்பத்திரிகை அடுத்த மாதம் முதலாம் திகதி ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழுவின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (உ-60,10)

# பேரணியில் பங்கேற்போருக்கான போக்குவரத்து ஒழுங்கு முறை

(யாழ்ப்பாணம்)

நாளை வியாழக்கிழமை இடம் பெறவுள்ள மாபெரும் கண்டனப் பேரணியில் கலந்து கொள்ளும் பொது மக்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகளை யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது. போக்குவரத்து ஏற்பாடுகளை ஒழுங்குமுறையாக கடைப்பிடிக்கும் வண்ணம் சிற்றூர்திச் சாரதிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

பொது மக்களை ஏற்றிவரும் சிற்றூர்திகள் அவர்களை இறக்கி விடும் இடங்களும் மீண்டும் ஏற்றிக் செல்லும் இடங்களும் வருமாறு;

| பிரதேசம் | இறக்கிவிடும் வீதி | ஏற்றிச் செல்லும்வீதி |
|---|---|---|
| தென்மராட்சி | முத்திரைச் சந்தி, செம்மணிவீதி, (கிட்டு பூங்கா) | ஏ-9 வீதி, கச்சேரியடி (அரியாலை) |
| வடமராட்சி | கிட்டுபூங்காவடி, பருத்தித்துறை வீதி. | கச்சேரி, நல்லூர் வீதி |
| யாழ்ப்பாணம் | செட்டித் தெரு, நல்லூர் | சோமசுந்தரம் வீதி |
| நல்லூர், கோப்பாய், அச்சுவேலி | கோயில் வீதி, கம்பன் கழகம் முன்,நல்லூர் | ஆஸ்பத்திரிவீதி, மாதா கோயில் முன். |
| தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய் | அரசடி வீதி, நல்லூர் | ஏ-9, பிரதான வீதி |
| தீவகம், காரைநகர் | வீரமாகாளி அம்மன் கோவில், பருத்தித்துறை வீதி | புழைய பூங்கா வீதி. கச்சேரி. |

(த)

# சட்டத்திற்கு முரணாக...

ஐக்கிய தேசியக் கட்சி அரசின் இத்தகைய முயற்சிகளை எதிர்ப்பதற்கு ஒருபோதும் தயங்கமாட்டாது.

நாடடின் தற்போதைய தேர்தல் முறையை மாற்றுவதற்கு அரசியல் யாப்பை மாற்ற வேண்டுமென்று அரசாங்கம் கூறுவதை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம்.தேர்தல் முறையை மாற்றுவதற்கு அரசியல் யாப்புக்கு வெளியே நடவடிக்கை எடுக்க வேண்டிய எவ்வித தேவைகளும் இல்லை. தேர்தல் முறையை மாற்றும் தேவைக்காக இந்த நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமானால் அதற்கு அரசியல் யாப்புப் பேரவை ஒன்றுக்கான அவசியம் எதுவும் இல்லை.

அரசினால் முன்வைக்கப்படும் அரசியல் அமைப்பு மாற்றத்தின் உண்மையான நோக்கம் நிறைவேற்று அதிகார முடைய ஜனாதிபதி முறையை ஒழிப்பறகேயாகும். இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே எம்.பிக்களுக்கு இலஞ்சம் கொடுத்தும் அச்சுறுத்தியும் தனது பெரும்பான்மைப்பலத்தை நிரூபிப்பதற்கு அரசு முயற்சி செய்கின்றது.

தேர்தல் காலத்தின் போது வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பு, வேலை வாய்ப்பு போன்ற உறுதி மொழிகளில் எதுவித கவனமும் மேற்கொள்ளப்படாமல் அரசியல் யாப்பை மாற்ற முனைவதை மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்சள்.நாட்டின் தேசிய தேவைகளைக் கவனத்தில் எடுத்து சகல கட்சிகளுடனும் கலந்துரையாடியபின்பே அரசியல் யாப்பு திருத்தப்பட வேண்டும். ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் அரசியல் அமைப்பை மாற்றுவதற்கென தினேஷ்குணவர்த்தனா தலைமையில் அமைக்கப்பட்ட விசேட பாராளுமன்றக் குழுவின் அறிக்கையின் சிபார்சுகளை அமுல் செய்ய ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்குமெனக் கூறிய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அரசு தனது குறுகிய அரசியல் இலாபத்திற்காக அரசியல் யாப்பை மாற்ற முற்பட்டால் அதனை கட்சி எதிர்க்கும் என்று கூறினார். (ம)

# கண்டனப்...

அனைவரும் தமது நாளாந்தக் கடமைகளைப் பின்தள்ளிப் பேரணியில் அணி திரளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் பகனகலிங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (த)

# மனிதாபிமானப் பணிகளை...

இங்கே எமது மக்களுக்காக முன்னெடுக்கப்படுகின்ற மனிதாபிமானப் பணிகள் செயற்படுத் தப்படுத்தப்படுவது குறித்தும், உள்ளூர் ஸ்தாபனங்களோடு இணைந்து எமது மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய செயற்பாடுகளை ஆராய்வது குறித்தும் கலந்தாலோசித்துள்ளோம். முக்கியமாக தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய மனிதாபிமானப் பணிகளை எந்த வகையில் எப்படியான ஒருங்கிணைப்போடு முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து கலந்துரையாடினோம்.

கேள்வி: உதவி வழங்கும் நாடுகள் தமது உதவிகளை அதிகரிக்குமா?

பதில்: நாங்கள் இந்தக் கலந்துரையாடலில், தொண்டர் ஸ்தாபனங்கள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு குறித்து மட்டுமே கலந்துரையாடினோம். ஏற்கனவே நடைபெறுகின்ற மனிதாபிமானப் பணிகளை உள்ளூர் அமைப்புக்களோடு இணைத்து முன்னெடுத்துச் செல்கின்ற வகையில் ஒரு சிறப்பான செயல்திட்டத்தை ஏற்படுத்துகின்ற நோக்கோடும் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

கேள்வி: சமாதான நடவடிக்ககைள தற்பொழுது எந்த நிலையில் உள்ளது?

பதில்: ஏற்கனவே நாம் தெரியப்படுத்தியிருக்கின்றோம் மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டுமென்று இல்லை. இன்று சமாதான முன்னெடுப்புக்கள் எல்லாம் ஒரு முடக்கமான கேள்விக்குறியில் தளளப்பட்டிருக்கின்றன-என்றார். (த)

# சமாதான...

திகதி நாடு திரும்பவுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி பிரிட்டிஷ் பிரதமர் ரொனிப்பிளேயரைச் சந்திக்க எடுத்த முயற்சி சாத்தியப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

# புலிகள்...

குழுவினரும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டப் பதில் பொறுப்பதிகாரியும் கலந்து கொண்டார்.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி இல்ங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் இரு தரப்பினரும் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக சுமுகமான முறையில் இச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. (ம)

# தேரரைத்...

மன்றத்தில் தாக்கப்பட்டதற்கு மனித உரிமைகள் அபிவிருத்தி நிறுவனத்திற்கான சட்டத்தரணிகள் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர்.

இது ஒரு பயங்கரவாதச் சம்பவம். 2500 வருடங்களுக்கு மேலாக பௌத்தம் நிலவும் நாடான எமது நாடடில் பௌத்த குருமார் பாராளுமன்றில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவம் மிகவும் கொடுமையானதெனவும் திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார். (த-6)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.